முரசு : 4
ஒலி : 2

1985
மார்கழி

# தமிழ் முரசு

அனைத்து இயக்கங்களும் இணைந்து போராடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்

தமிழ் முரசு

தமிழ் முரசு -50

## ஈழத் தேசிய விடுதலை முன்னணியின் சிந்தனைக்கு....

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கச் சின்னமான போர்க்கப்பல் சிறிலங்காவுக்கு வருகை.

பாரிசில் சர்வதேச பயங்கரவாதத்தின் தந்தையர் நாடான இஸ்ரேலின் பிரதமருடன் நவபாசிச நாயகன் ஜெயவர்த்தன சந்திப்பு.

ஐரோப்பாவிலுள்ள சிறிலங்கா தூதுவர்களுடன் ஈழப்பிரச்சாரத்தை முறியடிக்கும் முறைகள் பற்றி ஜெயவர்த்தன ஆய்வு.

கோடிக்கணக்கான ரூபாய்கள் கொட்டப்பட்டு ஈழப்போராளிகளை அழிப்பதற்கான ஆயுதக் கிடங்காக சிறிலங்கா மாற்றப்படுகிறது.

போர்நிறுத்தம் - பேச்சுவார்த்தைகள் என்ற போர்வையில் போராளிகளின் கரங்கள் கட்டப்பட எதிரி தன் பலத்தை அதிகரிக்கிறான்.

அதே சமயம்...

ஈழ மக்களின் அங்கீகாரம் பெற்ற ஈழத் தேசிய விடுதலை முன்னணியை உடைக்க முயலும் 'புனிதப் பணியை' சிறிலங்கா அரசிடமிருந்து மொத்தமாகக் குத்தகைக்கு எடுத்துள்ள சதிக்கும்பல் தான் 'பல வகை'களிலும் தேடிய நிதியை ENLF இற்கு எதிரான பொய்ப்பிரச்சாரங்களை பாரிய அளவில் கட்டுவிடுவதில் 'முதலீடு' செய்து வருகிறது. சதிக்கும்பலாலும், துப்பாக்கி ஏந்திய சில தறிகெட்ட சண்டியர்களாலும் நிகழ்த்தப்பட்டு வரும் நாசகாரச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்களை ENLF இடையே பொய்யாகத் தொடர்பு படுத்தி இச் சதிக்கும்பல் போராட்டத்தை திசை திருப்ப முயல்கிறது.

அத்துடன்

சில இயக்கங்களுக்குள்ளும், இயக்கங்களின் வெளி நாட்டுக் கிளைகளுக்குள்ளும் இருக்கும் வலதுசாரிச் சிந்தனையும், ஆதிக்க வெறியும் கொண்ட இன்றுமொரு கூட்டம் எங்கே ENLF ஒரு இறுக்கமான அமைப் பாக மாறிவிட்டால் வீசப்போகும் புரட்சிக் காற்றில் அள்ளுப்பட்டு விடுவோம் என்றோ அன்றி ஈழத்தின் இளைஞர்களாக உள்ளவரும் தங்கள் ஆதிக்கங்களையுங் கள் சிதறிவிடும் என்றோ கருதி ENLF ஒரு இறுக் கமான, வலுவான அமைப்பாவதை தடுக்கும் முட் டுக் கட்டைகளை போட்டுக் கொண்டிருக்கின்றது.

இக்கட்டத்தில்

இத்தனை சதிகளாலும் சுற்றிவளைக்கப்பட் டிருக்கும் ENLF இற்கு நாம் கூறவிரும்புவது இன்றுமே. அடக்குமுறை இருளில் சிக்கித் தவிக்கும் ஈழ மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் நீங்கள்தான். ஈழப் போராட்டம் சிக்கலான பரிமாணங்களைத் தொட்டு நிற்கும் இன்றைய காலகட்டத்தில் ENLF இற்குள் இருக்கும் இயக்கங்களே (LTTE, TELO, EROS, EPRLF) உங்கள் எதிரிகளை இனங்கண்டு கொள்ளுங்கள், தனித்துவம் பேணும் தன்மைகளைத் தவி ருங்கள், உங்களிடையே ஏற்படும் சிறு பேதங்களை பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள்; ஐக்கியத்திற்காக உண்மையாக, உறுதியாக உழையுங்கள்; நீண்டகால நோக்கிலே... நேரான திசை வழியிலே சிந்தியுங்கள். மக்களை ஐக்கியப்பட்ட உங்கள் பதாகையின் கீழ் திரட்டுங்கள். போராட்டத்திலிருந்து மக்களை விலக்கி வைக்கும் மமதைத் தனத்திற்கு இடங்கொடாதீர்கள்.

ஆனால்

பலம் படைத்த எதிரியை முறியடிக்க, சதிக்கும்பல் களின் கபடநாடகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க, சுயநலமிகளின் கனவுகளைத் தகர்க்க ENLF தனக்குள் எந்த சிறுவேறுபாடுகளும் இன்றி ஈழமக்களைப் பாதுகாக் கும், ஈழப் போராட்டத்தை முன்னெடுக்கும் அமைப்பாக இய ங்கவேண்டும் இதுதான் ஈழமக்களின் இன்றைய விருப்பம்.

# "தார்மீக ஸ்ரீலங்காவின் பொருளாதார நிலைப்பாடுகளும் ஈழ மக்களும்"

பொருளாதாரத்தில் சிக்கற்படுகின்ற அல்லது, 'தேவைகள்' முற்று முழுதாக நிறைவேற்றப்படாத 'பொருளாதாரத்தைக்' கொண்ட எந்த ஒரு நாடும் அந்நாட்டு மக்களின் எதிர்ப்புக்கு உள்ளாகின்றது. அதாவது நாட்டு மக்களின் 'தேவைகள்' அல்லது 'விருப்பங்கள்' பூர்த்தியாகாத முறையில் அந்நாட்டு அரசு ஆட்சி செய்யுமாயின் நிட்சயமாக அங்கு ஒர் சர்வாதிகாரமுருவாகும். (அவ் அரசு பலம் கொண்டதானால்) அல்லது மறுபுறமாகக் கூறின் அரசை எதிர்த்து ஒர் 'மக்கள் புரட்சி' உருவாகும்.

அந்த வகையான அடிப்படையில் இன்று தார்மீக ஸ்ரீலங்காவின் அரசுக்கும் ஒர் இக்கட்டான நிலை ஏற்படும் நேரம் வந்துவிட்டது. ஏன்? ஏற்பட்டுவிட்டது என்றே கூறலாம்.

ஸ்ரீலங்கா அரசினால் எழுபதுகளின் இறுதியில் கொண்டுவரப்பட்ட 'திறந்த பொருளாதாரக்' கொள்கை மூலம் அந்நிய செலவாணியைச் சம்பாதிக்கலாமென ஆரம்பத்தில் கருத்தில் கொண்டிருந்தாலும் அது பூரணவெற்றியை ஸ்ரீலங்காவிற்கு அளிக்கவில்லை. உண்மையில் அரசு திறந்த பொருளாதாரக் கொள்கையில் கூடிய கவனம் செலுத்தியிருந்தால்

வெற்றியை அல்லது அதன்நோக்கத்தை அடைந்திருக்கலாம். ஆனால் இனவெறி பிடித்த அரசின் கவனம் யாவும் 'தமிழ் பேசும் மக்களை' அடியோடு அழித்துவிட வேண்டுமென்பதே 'காரணங்கள்' அல்லது 'ஆர்வங்கள்' திசை திருப்பப்பட்டதனால் தமிழ் பேசும் மக்களை அழிக்க அல்லது அவர்களின் 'இலக்கை' அழிக்க பல கோடி ரூபாய்களைச் செலவழிக்க வேண்டியநிலை அரசிற்கு ஏற்பட்டது.

நவகாலனித்துவத்தின் அடிப்படையில் முதலாளித்துவ நாடுகளினது மூலதனம் ஒரு நாட்டில் 'உட்கொணரப்படும்' போது அந்நாடு தன் முழுநோக்கமான இலாபத்தையும், நாட்டின் செல்வங்களையும் சுரண்டுவதை நோக்கமாகக் கொள்ளும். மாறாக நாம் நினைத்தளவிற்கு வேலை வாய்ப்பு வசதிகளோ நாட்டின் அபிவிருத்தியோ பூரணமாக ஏற்படாது. ஒர் சிறியளவில் அல்லது பெயரளவில் சிலவேளை ஏற்படலாம். மேலும் வல்லரசு நாடுகள் எந்தப் பொருளில்லது எந்தத் தொழிலில் கூடிய இலாபம் இருக்கின்றதோ அதையே செய்யும். ஒருபோதும் தான் மூலதனம் இடும் நாட்டின் நலத்தைப் பொருட்களின் தரத்தைக் கவனத்தில் எடுக்க மாட்டாது.

மேலும் அவ்வல்லரசு நாடுகள் அந்நாட்டின் அழகிலேயோ அமையத்திலேயோ அல்லது அங்கு காணப்படும் மூலவளத்தையோ அடிப்படையாகக்கொண்டு அந்நாட்டைத் தான் கைப்பற்றவும், அல்லது தந்திர உபாயங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் மூலம் தன்வசப்படுத்தவும்கூடும். இன்று இனவெறி பிடித்த ஸ்ரீலங்கா அரசு ஈழநாட்டின் ஒரு பகுதியான திருகோணமலையினை அமெரிக்காவிற்குத் தாரை வார்ப்பதற்கு தயாராக இருக்கின்றது.

ஸ்ரீலங்காவின் முடிவுப் பொருட்களின் சந்தைப் பத்தலைப் பொறுத்த முதலாளித்துவ நாடுகளே அதாவது அவற்றைக்கொள்வனவு செய்யும் நாடுகளே விலைகளை நிர்ணயிக்கின்றன. ஒரு போதும் ஸ்ரீலங்கா அரசு தன் முடிவுப் பொருட்களுக்கு விலைகளை தீர்மானிப்பதில்லை. அல்லது இடுவதில்லை. கொள்வனவு செய்யும் நாடுகள் கொடுக்கும் விலைகளை ஏற்றுக்கொள்வதோடு அவர்களிடமிருந்து பெறப்படுகின்ற 'இறக்குமதிப் பொருட்களுக்கு' கூடிய விலை கொடுத்து வாங்குகிறது. (இங்கு முதலாளித்துவ நாடுகளே தமது பொருட்களுக்கு விலைகளைத் தீர்மானிக்கின்றன.) அத்தோடு தாம் கொடுத்த கடனுக்குரியவட்டியை மட்டும் பெருந்தொகையாக அறவிடுகின்றது. ஏனெனில் ஸ்ரீலங்காவினால் தான் பெற்ற கடன்களைக் கொடுக்க முடியாதவட்டியையே கொடுக்க முடியாமல் இருக்கும் போது எப்படி பெற்ற கடனைக் கொடுக்கமுடியும்?

நாளுக்கு நாள் பொருளாதார அபிவிருத்தியென்றும், பாதுகாப்புச்செலவென்றும் சிங்கள மக்களுக்குப் பாசாங்கு காட்டி ஈழமக்களை அழிப்பதற்காகப், பாதுபாப்பு(?) அமைச்சரும் ஜே.ஆரும் பெருந்தொகையான பணத்தை அமெரிக்காவினிடமிருந்தும், தென்கொரியா, பிரித்தானியா போன்ற நாடுகளிலிருந்தும் அளவிற்கு மிதமிஞ்சிய நவீனகர ஆயுதங்களையும் கொள்வனவு செய்கிறது. சிங்கள இடதுசாரி மக்களே பயப்பிடுமளவிற்கு தனது இராணுவத்தைப் பலப்படுத்தி வைத்திருக்கின்றது இன்றைய ஸ்ரீலங்கா அரசு. இன்றுவரை அமெரிக்காக கொடுத்த கடன் மட்டும் 500கோடி டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இன்னும் தன் சுயநலம் கருதி கொடுக்கத் தயாராக உள்ளது.

இவற்றைவிட ஈழப்போராட்டத்தை நசுக்குவதற்காக இஸ்ரேலிய மொசாட் குழுவினர் போன்ற ஆலோசகர்களையும் பஞ்சுகரவாத பயிற்சியாளர்களையும் அழைப்பதற்கு மிகவும் கூடுதலான பணத்தைச் செலவழித்துள்ளது.

எனவே இத்தேவையற்ற பாதுகாப்புச் செலவுகள் அனைத்தும் மக்கள் மேல் சுமத்தப்பட்டு அவர்களின் 'தலைச் சுமையை' கூட்டவேண்டிய நிலையில் ஸ்ரீலங்கா இருக்கிறது.

ஸ்ரீலங்கா அரசின் தேசியவருமானத்தின் பெரும் பகுதியை வகிக்கும் பெருந்தோட்டப் பயிர்களும் அதற்கு அடுத்தபடியாக வகிக்கும் உல்லாசப்பிரயாணத்துறையும், இரத்தினக்கல் உற்பத்தியும்(வெட்டுதல்) கடந்த ஆண்டுகளிலே வீழ்ச்சிப் போக்கையுடையதாகக் காணப்படுகிறது. இதற்கு ஈழமக்களது போராட்டத்தின் தலைமைகளே அல்லது ஈழப்போராட்டத்தின் முன்னெடுப்புக்களின் செயல்களே காரண

மாக ஒருவகையில் கூறலாம். முக்கியமாக பெருந்தோட்டத்துறை பாதிக்கப்பட்டது. அரசின் திறந்த பொருளாதாரக்கொள்கையின் நிர்வாகச் சீர்கேடுகள் எனவும் கூறப்படுகின்றது.

இவற்றைவிட அரச பயங்கரவாதத்தினால் ஈழத்தின் பல பாகங்களிலும் கடல் வளங்கள் பாதிக்கப்பட்டமையினாலும் கனிப்பொருள் சேகரிப்பின்மை போக்குவரத்து துண்டிக்கப்பட்டமை, போன்ற காரணங்களினால் ஸ்ரீலங்காவிலும் ஈழத்திலும் தொழிற்சாலைகள் இயங்காத காரணத்தினால் தமிழ் சினிமாத்துறையல்லது அதன் வருமானங்கள் பாதிக்கப்பட்டமையாலும் ஸ்ரீலங்காவின் அபிவிருத்தி பாதிக்கப்பட்டது. மேலும் இஸ்ரேலிய- ஸ்ரீலங்கா நல்லுறவால் அரபு நாடுகளின் எதிர்ப்பை ஸ்ரீலங்கா எதிர்நோக்கியுள்ளதால் வேலைவாய்ப்பு வசதிகள் போன்ற இன்னோரன்ன வருமானங்களையும் இழந்துள்ளது. சுருக்கமாகக் கூறினால் சகல விதத்திலுந் தமிழ் பேசும் மக்களை அழிக்கும் ஒரு நோக்கம் ஸ்ரீலங்கா இனவெறி பிடித்த அரசிற்கு இருந்ததால் அவ்வரசின் அபிவிருத்தி யாவும் குட்டிச்சுவராக்கப்பட்டுள்ளது. அந்நாட்டின் அபிவிருத்தி யாவும் குறைந்தது 10 ஆண்டுகளுக்கேனும் பின் தள்ளப்பட்டுள்ளது எனலாம்.

மேற்கூறப்பட்ட ஸ்ரீலங்காவின் பொருளாதார சிக்கல்கள் தமிழ் பேசும் மக்களின் வெறுப்பினை விட சிங்கள மக்களின் வெறுப்பையும் அரசு எதிர் நோக்க வேண்டியுள்ளது. இன்று ஸ்ரீலங்கா எதிர்நோக்கி உள்ள விலைவாசியுயர்வும், பணவீக்கமும், வேலையில்லாத் திண்டாட்டமும் அதனோடு சேர்ந்த தலாவருமானக் குறைவும் சிங்கள மக்களின் எதிர்ப்புக்குக் காரணமாயின.

அமையப் போகும் ஈழம் இன்று ஸ்ரீலங்கா அநுபவிக்கும் கடல் வளத்தில் கணிசமான அளவைக் கொண்டுள்ளது. கனிவளங்களைப் பொறுத்தவரையில் சுண்ணம்புக் கல் யாழ் குடா நாட்டிலும் மன்னார், முல்லைத்தீவு, போன்ற மாவட்டங்களிலும் பரவலாகக் காணப்படுகிறது. இது இலங்கை சீமெந்து உற்பத்தியில் பெரும்பகுதியை வகிப்பது குறிப்பிடத்தக்கது. இவற்றை விடக் காரீயம் இல்மனேயிற்று, உப்பு சிலிக்காமணல், களிமண் போன்ற கனிப்பொருட்கள் ஈழத்தினிற் காணப்படுகின்றன. ஸ்ரீலங்காவின் கனிப்பொருள் உற்பத்தியில் முதலிடத்தை காரீயம் ஈழத்தின் எல்லையான வவுனியாவில் மொத்த உற்பத்தியிற் காற் (¼) பகுதி காணப்படுகிறது. உப்பு இன்று ஏற்றுமதிப் பொருளாகக்காணப்படுகிறது.

ஈழ மக்கள் இயல்பாகவே உடல் உழைப்பைக் கொண்டவர்களாகையால் மக்களின் உழைப்பு அவர்களின் முதலீடுகளைக் குவித்து மனித உடல் உழைப்பை திரட்டலாம். ஸ்ரீலங்காவின்நெல் உற்பத்தியில் கூடிய விளைவுகளை அல்லது இலாபங்களைத் தரக்கூடிய 'ஈழமண்ணின்' வளத்தைச் சிறந்த முறையிற் திட்டமிட்டுப்பயன்படுத்தினால் சிறந்த உற்பத்தியைப் பெற்று மக்களின் தேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிய ஏற்றுமதி செய்யக் கூடிய வாய்ப்புகளும் உருவாகலாம். எனினும் எமது ஈழத்தின் பலபாகங்களிலும் சிதறிக்கிடக்கும் ஆயிரக்கணக்கான குளங்களை புனரமைப்பதன் மூலம் மேலே கூறப்பட்டவை சாத்தியமாகும்.

உப உணவு உற்பத்தியிலும் பழச் செய்கை, மிளகாய், வெங்காயம் போன்றன ஈழத்திலிருந்து ஸ்ரீலங்காவிற்குக் கூடுதலானளவில் செல்கின்றது. அவையும் எமது ஈழத்தின் பொருளாதார வருவாயில் மிகவும் கூடுதலானபங்கை வகிக்கக் கூடியதாக இருக்கும். இவற்றைவிட வட பகுதியைப் பொறுத்த வரையில் பணப் பயிரான புகையிலையில் மிகவும் கூடுதலான வருவாய்காணக் கூடியதாக உள்ளது. மேலும் பணப் பயிர்களில் மட்டும் கவனம் செலுத்தாமல் பன்முறைப் பயிர் செய்கைகளின் கீழ் வீட்டுத்தோட்டம் ,ஆடு,மாடு, கோழி, தேனீ போன்ற கால்நடை, பறவை வளர்ப்புகளில் கூடிய கவனம் செலுத்தியும் கைத்தொழிற்பாடுகள், மரவேலைகள்போன்றவற்றில் இயன்றளவை [illegible] செய்வதில் அதிக ஆர்வங்காட்டினால் நிட்சயம் அவர்களின் வாழ்வு சுபீச்சமாக அமையும்.

ஈழமக்களுக்கானவெளி நாட்டுதவிகளைப் பொறுத்த வரையில் சோசலிசநாடுகளின் ஆதரவு நவகாலனித்துவ நாடுகளைப் போலல்லாமல் கூடுதலான அளவில் நியாயமான அளவிற்குக் கிடைக்கும்.

எனவே எந்தவகையானபொருளாதார அமைப்பை சிறந்த முறையில் அமைப்பதன் மூலம்அப் பொருளாதார அமைப்பு சிக்கலற்றதாக அல்லது சுமை குறைந்ததாக அமையவேண்டும் என ஈழமக்கள் சிந்திக்க வேண்டும். அனுபவங்களைப் பாடமாகக் கொண்டு இன்றைய மாணவர்களுக்கு எதிர்கால சுபீட்சமான வாழ்விற்கு வழிகாட்டி சிறந்த கல்விமான்களாக்கி அரசியல் மயப்படுத்தி ஈழமக்களை ஒருங்கிணைத்து சிறந்த ஒரு பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு நாடாக வரலாற்று ஏடுகளிற் தவழக்கூடியதாக எம் மண் மாற வேண்டும், என்பதை இன்றைய நேரத்தில் ஒவ்வோர் ஈழ மகனும் நினைக்க வேண்டும்.

"வளர்க ஈழம்"

வாழ்க ஈழ மக்கள்

வளம் பெறுக ஈழ மண்"

ооооооооооооо- லோகன்-நவரத்தினம்- ооооооооооооооо

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நெஞ்சத்து நெருடல்கள்

வரலாற்றுப் பரிச்சயந்தம்
தர மறுக்காத
தரிசனங்களின்
நிஜத்தை வருடி
கோடிடும் ஆருடங்கள்;
பூஜ்ஜியங்கள்
போர்த்திக் கொண்ட
பொன்னுடைகள்.
புரிந்துணர்வுகள்
புகுந்து கொண்ட
மனங்களின் மகத்துவத்தினால்
புகலிடம் தேடிக்கொண்டு
இதிகாச.
வனவாசத்திற்கு
புதிய பிரதிகளை பிரசவித்தன.

இவைகளே
ஒரு பாலையின் மேற்பரப்பில்
பாதம் பதித்திட்ட
தீர பயணத்தின் தடங்களை
ஏலமிட்டு
சோலையின் குளிர்மைக்கு
குத்தகை பேசிக்கொண்டவைகள்.

இல்லாமை மறுக்கும்
இலவுகளின்
இறுமாப்புக்கள்!
வக்கிர மனங்களிற்கு
மாயைத் திரையிட்டு
முலாம் பூசி
முக்காடிட்டுக் கொண்டதனால்
ஆசன தரிசனத்தின்
தனி அவர்த்தனங்கள்
அடையாளம் காணப்படாது போயின
ஆனால் —

அரசியல் சதுரங்க அரங்கத்தில்
அற்றுப்போன இவைகளின்
அலங்கரிப்புகளால்
அஞ்ஞான வாசமே ஏகபரிகாரம்
என்றுணரும் வேளை
நாளை இவைகள்
நமது கரங்களால்
களையெடுக்கப்படும்.

— அருந்ததி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ.ழ தமிழக சிறீலங்கா செய்திகள்

## "பேச்சுவார்த்தையால் அடைய முடியாவிடின் ஆயுதபலத்தாலேனும் சமாதானத்தை அடைவோம்"

**-ENLF.**

"பேச்சுவார்த்தைப் பலத்தினால் சமாதானத்தை அடைய முடியாவிடின் ஆயுதபலத்தினால் அது பெறப்படும்" இவ்வாறு ஈழத்தேசிய விடுதலை முன்னணி (LTTE, TELO, EROS, EPRLF) இந்திய அரசுக்கு அறிவித்துள்ளது. சமாதானத்துக்காக போராளிகள் தமது உயிரைத் துறக்கத் தயாராக உள்ளதாகக் கூறிய ENLF போராளிகள் ஆயுதம் ஏந்த வேண்டி வந்த காரணத்தை விபரித்ததுடன் ENLF சரணடைய வேண்டுமென இலங்கைத் தமிழ் மக்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனால், தங்களின் உயிரையும், உடைமையையும், கௌரவத்தையும் காக்கும் சமாதானத்தை அடையவே எதிர்பார்க்கிறார்கள் எனவும் தெரிவித்துள்ளது. தமிழ் மக்களின் நலன்கள் விட்டுக்கொடுக்கப்பட மாட்டா என்ற இந்திய அரசின் "திடமான உறுதிமொழி" காரணமாகவே சிறீலங்கா அரசுடன் ENLF பேச்சுவார்த்தை மேற்கொண்டது எனவும் அக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளையில் விடுதலை இயக்கங்களை போரியல் ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் நிர்மூலமாக்கி, தமிழ் மக்களிடமிருந்து இயக்கங்களை அந்நியப் படுத்தவே பேச்சுவார்த்தைகள் இழுத்தடிக்கப் படுகின்றன என்பதை ENLF பிரதிநிதிகள் தம்மைச் சந்தித்த இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. பண்டாரிக்கு விளக்கியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஈழமே இறுதித் தீர்வு' - ENLF
## மாற்றுத் தீர்வு எதையும் முன்வைக்க மறுப்பு.

ஈழம் தவிர்ந்த வேறு எந்த மாற்றுத் தீர்வையும் பேச்சுவார்த்தைகளின் போது முன்வைக்க ENLF மறுத்தது. இதுபற்றி ENLF பேச்சாளரான ஜோர்ச் பாலமோர் கருத்துத் தெரிவிக்கும்போது 'இன்றைய நிலையில் மாற்று யோசனைகளை முன்வைப்பது ஸ்ரீலங்காவின் வஞ்சக நோக்கங்களுக்கு வழிவகுப்பதாகவே கருதப்படும்' எனக் கூறியதுடன் இஸ்ரேலின் மேற்குக் கரை நடவடிக்கைகளைப் போன்று கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்களை ஸ்ரீலங்கா அரசு அமைப்பதாகவும் அரசியல் தீர்வில் அது விசுவாசம் கொண்டிருக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டினார். ஈழத்தைத் தவிர்ந்த வேறு எந்தத் தீர்வையும் ENLF முன்வைப்பது யதார்த்தமற்றதாகவே இருக்கும் எனவும் ENLF இந்திய அரசிடம் தெரிவித்துள்ளது.

## இலங்கைப் பிரச்சினை பற்றிய ராஜீவ், பகத் கருத்துக்களுக்கு ENLF வரவேற்பு.

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பாலிராம் பகத் இந்தியப் பாராளுமன்றத்தில் "விடுதலைப் போராட்டம் ஆயுதந் தாங்கிய படைகளால் நசுக்கப் படவிடக்கூடாது' எனத் தெரிவித்த கருத்தையும், மேற்படி பாராளுமன்றத்தில் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி "இலங்கையில் சட்டம், நீதிமுறைகளுக்குப் புறம்பான 'மனித' உரிமை மீறல்கள் எதுவும் தென்பகுதிகளில் நடப்பவற்றுக்கு சமமாகக் கருதப்படும்" எனத் தெரிவித்த கருத்து ஆகியவற்றை ENLF வரவேற்பதாகக் கூறி முன்னணிப் பிரதிநிதி ஜோர்ச் கேதீஸ்வரன் ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் இராணுவத் தீர்வை நசுக்கப் படுத்த என்ன எதிர் நடவடிக்கைகள் தேவை என்பதை ENLF நன்கு தெரிந்து வைத்துள்ளது எனவும் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழமக்களுக்கு இயற்கையும் எதிரியா...?

ஆக்கிரமிப்பாளர்களின் காலடிகளின் கீழ் அகப்பட்டு அடக்குமுறை அவலங்களை அநுபவித்து வரும் ஈழமக்களுக்கு இயற்கையும் எதிரியாக மாறியுள்ளது. வடமாகாணத்தில் ஏற்பட்ட பெருவெள்ளம் 3000க்கு மேற்பட்ட குடும்பங்களை அகதிகளாக்கியுள்ளதுடன் ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல்களில் பயிர்களை நாசம் செய்துள்ளது. போக்குவரத்துச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மின்சாரம், தொலைபேசிச் சேவைகளும் பல இடங்களில் துண்டிக்கப்பட்டுள்ளன. நிவாரண வேலைப்பணிகளில் விடுதலைப் போராளிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## "போராட்டத்தை முன்னெடுக்க மக்களின் உதவியை நாடுதல் இயக்கங்களின் உரிமை"— ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரசுரம்

'ஈழப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் அமைப்புக்கள் யாவற்றுக்கும் மக்கள் மத்தியில் செல்வதற்கும், தங்கள் கொள்கைகளை விளக்குவதற்கும், மக்களிடமிருந்து உதவிகளைப் பெறுவதற்கும் உரிமை உண்டு. இந்த ஜனநாயக உரிமையை உணராது சில இயக்கங்கள் செயற்படுகின்றன. இத்தகைய இயக்கங்களைச் சார்ந்தவர்கள் தனியார் நிறுவன உரிமையாளர்கள், செல்வந்தர்கள் போன்றோரிடம் சென்று எதுவித விளக்கமும் அளிக்காது ஆதரவு தருமாறு கேட்கின்றனர். ஏனைய அமைப்புக்கள் மீது அவதூறு பொழிகின்றனர். எங்களுக்கு ஆதரவு தருவீர்களாயின் மற்றைய இயக்கங்களிடமிருந்து பாதுகாப்பளிப்பதாக உறுதியளிக்கின்றனர். இத்தகைய முதலாளித்துவ அரசியல் பிழைப்பு நடத்துவதானது மக்கள் மத்தியில் விடுதலை வெறியை வளர்ப்பதற்குப் பதில் இயக்க வெறியையே வளர்க்கும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினால் வெளியிடப்பட்ட பிரசுரம் தெரிவிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழப் புரட்சி அமைப்பு (EROS) மேற்கொண்ட ஹர்த்தால் பூரண வெற்றி!

உதிரத்தை உரமாக்கி, வியர்வையை நீராக்கி, உயிரை விதையாக்கி, தமது வாழ்க்கையை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக அர்ப்பணிக்கும் மலையக மக்களின் அவலநிலையை எடுத்துக் காட்டும் நோக்கமாகவும், அரசியல் அந்தஸ்து, வாக்குரிமை பறிக்கப்பட்டு அவர்கள் அநாதைகள் ஆக்கப்பட்ட (1948) நவம்பர் 15ந் திகதி அந்நாளை நினைவுகூரும் வகையில் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு ஈழப்புரட்சி அமைப்பு விடுத்த கோரிக்கையை ஈழமக்கள் அனைவரும் ஏற்று 15.11.85 அன்று ஈழப்பிரதேசமெங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ்டித்தனர். இத்தினத்தன்று மலையகப் பகுதிகளிலும் 50க்கும் மேற்பட்ட கடைகள் பூட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சிறிலங்கா அரசின் 'போர்க்கால' வரவு செலவுத் திட்டம்.

ஈழ மக்கள் மீது பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் ஒன்றை நிகழ்த்திவரும் சிறீலங்காவின் நவபாசிச அரசு வங்குரோத்து அடைந்துவிட்ட தனது பொருளாதார நிலையிலிருந்து சிங்கள மக்களின் கவனத்தை திசைதிருப்புவதற்காக இவ்வரவு செலவுத்திட்டத்தை போர்க்கால வரவுசெலவுத்திட்டமாக வர்ணித்துவருகிறது. 2949 கோடியே 30 இலட்சம் ரூபா துண்டுவிழும் இவ்வரவுசெலவுத்திட்டத்தில் 584 கோடி ரூபா ஈழமக்களை அழித்தொழிப்பதற்காக பாதுகாப்பமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. துண்டுவிழும் தொகையில் 1358 கோடியே 30 இலட்சம் ரூபாவை தனது ஏகாதிபத்திய எஜமானர்களிடம் கடனாகவும், பிச்சையாகவும் பெறப்போவதாக சிறீலங்கா நிதியமைச்சர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடரும் அடக்குமுறைகள்...

ஈழமக்களுக்கெதிரான சிறீலங்கா அரசின் அடக்குமுறைகள் தினமும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன. 22.11.85 அன்று காரணமின்றி அப்பாவிமக்களை கைது செய்வதற்கு எதிராக 2000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மட்டுநகரில் நடத்திய கண்டன ஊர்வலம் சிறீலங்கா அதிரடிப்படையினரால் கண்ணீர்ப்புகைக் குண்டு வீசிக் கலைக்கப்பட்டது. 17.11.85 அன்று தோரில் இடம்பெற்ற தேடுதல் வேட்டையில் சிறீலங்காவின் கூலிப்படைகளால் 6 அப்பாவி ஈழமக்கள் கொல்லப்பட்டனர். ஈழ பிரதேசமெங்கும் தொடர்ச்சியாக ஹெலிகொப்டர்கள் மூலமும், விமானங்கள் மூலமும் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. 16.11.85 அன்று மட்டுநகரில் கூலிப்படைகள் நிகழ்த்திய தாக்குதலில் 8 பேரை பலிவாங்கியதுடன் 15 வீடுகளை தீக்கிரையாக்கி, பணம், நகை கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் 40 இலட்சம் ரூபா பெறுமதியான உடைமைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இதே தினம் களுவாஞ்சிக்குடியிலும் 8 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 13.11.85 அன்று திருமலையில் கூலிப்படைகள் நிகழ்த்திய தேடுதல் வேட்டையில் 183 அப்பாவிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 120 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. 14.11.85 அன்று திருமலையில் மேலும் 56 பேர் கைது செய்யப்பட்டனர். 13.11.85 அன்று மன்னாரில் 70 வயதுடைய முதியவர் உட்பட இருவர் கூலிப்படையினரால் கொல்லப்பட்டனர். 9.11.85 தொடக்கம் திருமலை, மூதூர் பகுதிகளில் கூலிப்படையினர் நடத்திய தேடுதல் வேட்டைகளில் 36 பேர் கொல்லப்பட்டதுடன் 80 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 17.11.85 அன்று கிளிநொச்சி திருநகர் கூலிப்படைகளால் சுற்றிவளைக்கப்பட்டு சோதனைக்குள்ளான போது ஒரு பெண் உட்பட இருவர் கொல்லப்பட்டு 10 பேர் படுகாயமடைந்தனர். 100 பேர் கைதுசெய்யப்பட்டனர். இலங்கையில் யுத்த நிறுத்தத்தின் பின்னர் 2000 தமிழ் மக்கள் கொல்லப்பட்டும் 1 இலட்சம் பேர் அகதிகளாக்கப்பட்டும் உள்ளனர் என்று நெடுமாறன் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவற்படைகளுக்கு எதிராக தொடரும் தாக்குதல்கள்.

அரசகாவற்படைகளுக்கெதிராக ஈழப்போராளி களின் தாக்குதல்கள் தொடர்கின்றன. 31.10.85 அன்று திருமலையில் நடந்த கண்ணிவெடித்தாக்குத லில் லெப்டினன்ட் தெனகம, சுவாது மஹினால் உட் பட 7பேரும், பொலநறுவை - வெலிகந்தவில் இடம் பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் இரு இராணு வத்தினரும் கொல்லப்பட்டனர். 6.11.85 அன்று சேருவில - கந்தளாய் வீதியில் சிற்றூர் எனும் இடத் தில் நிகழ்த்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் ஒரு சார்ஜன்ட் உட்பட 7பொலிசாரும், வவுனியா க்கு அண்மையில் இன்னுமொரு கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவத்தினர் 4பேரும் கொல்லப் பட்டனர். 13.11.85 அன்று ஒட்டுசுட்டானில் இடம்பெற்ற கண்ணிவெடித்தாக்குதல் இராணுவத் தினர் 4பேரை படுகாயத்துக்குள்ளாக்கியுள்ளது. 13.11.85 அன்று மட்டுநகரில் இடம்பெற்ற கண்ணி வெடித்தாக்குதல் 5பொலிசாரை படுகாயத்துக்குள் ளாக்கியுள்ளது. 16.11.85 அன்று மட்டுநகரில் இடம்பெற்ற மற்றுமொரு கண்ணிவெடித் தாக்கு தலில் ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட நான்கு பொலிசார் கொல்லப்பட்டனர். 22.11.85 அன்று அதிகாலை பதவியா பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 9.11.85 அன்று ஏறாவூர் பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

---

தோழர்களே!

ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம் (EPIC) தரும் ஈழச்செய்திகளை அறிய தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி தொடர்பு எண்....

4874-60-43.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவு தெரிவித்து இலங்கை இடதுசாரி பிரமுகர்கள் தமிழகம் பயணம்.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலை இயக்கங்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டினை வரவேற்று இது குறித்த தமது ஆதரவை நேரில் சென்று ENLF உடனும் இதர இயக்கங்களிடமும் தெரிவிப்பதற்காக பீட்டர் கெனமன், கொல்வின் ஆர்.டி சில்வா, சரத் முத்தெட்டுவேகம, பாலதம்பு ஆகியோர் தமிழகம் செல்ல உள்ளனர். இச் செய்தியை EPRLF இன் 'ஈழ வானொலிச் சேவை'யும் அறிவித்துள்ளது.

### ஈழப் போராட்டத்தில் இன்னுமொரு சதி.

தமது சுயநல நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்காக ஈழப் போராட்டத்தைத் திசைதிருப்பி அற்ப சலுகைகளுக்காக இனத்தை விற்க முயலும் சதிக்கும்பல் இன்று ஈழப்போராட்டத்தை முழு முனைப்போடு முன்னெடுக்கும் ஈழத்தேசிய விடுதலை முன்னணிக்கு எதிராகவும் குறிப்பாக அதன் அங்கமான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு எதிராகவும் பாரிய அளவில் பொய்ப்பிரச்சாரங்களை முடுக்கி விட்டுள்ளது. ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் தலைமையோடு கைகோர்த்துள்ள இந்த சதிக்கும்பல் தன்னுடைய சுயநல நோக்கில் புரட்சிகரத் தன்மை வாய்ந்த இயக்கங்கள் ஒன்றாக இருப்பது கண்டு பொறுக்காமல் இயக்கங்களை மக்களிடமிருந்து அந்நியப்படுத்தும் 'புனிதப்பணியை' சிறீலங்கா அரசின் சேவகனாய் செம்மையாய் செய்து வருகிறது. எனவே உண்மைகளைப் புரிந்து அறியுங்கள் ஈழ மக்களே. சதிகாரர்களின் பொய்களை நம்பி போராட்டத்திலிருந்து அந்நியப்பட்டு விடாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருபானியின்
ஒரு
கவிதை

தோழரே
துப்பாக்கியை உயர்த்தும்
வலது தோளில்
உதைப்பை வாங்க ஏதுவாக
நடுவில் உள்ள
கோட்டிடை வெளியில்
நேரே, நேராக மட்டத்தான்
பாரும்.
எதிரிதானே அது?
வலது ஆள்காட்டி விரலைப் பின்னேக்கி இழும்
சரியாகக் குறிபார்த்தால்
ஒரேகுண்டே போதும் தோழரே.

சமயத்தில்
எதிரி கிடைக்கா விட்டால்
ஊரில் மனிதர்களும்,
மின்சாரக் கம்பங்களும் உண்டு.

அதுவும் கிடையாத போது
நெறி பிறழாத ஒரு தோழனே..........

துப்பாக்கி சூடாறக் கூடாது பாரும்.
நியாயப் படுத்த தலைமைப் பீடமும்,
பிரசுரம் அடிக்க வெளியீட்டுப் பிரிவும்
உள்ளன தோழரே

விடுதலைப் பாதையில்
வீறு நடை போடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பயங்கரவாத ஏற்றுமதி



நிக்கரகுவாவில் அப்பாவி விவசாயியை கொலைசெய்யும் றேகனின் 'அன்புச் சகோதரன்'



ஆப்கான் எதிர்ப்புரட்சியாளருடன் எஜமான் றேகனின் அந்நியோன்ய உரையாடல்....

ஏகாதிபத்தியமானது பல்வேறு முகமூடிகளுடன் உலகில் சஞ்சரித்து வருகிறது· ஆனால் தனது வெளிநாட்டு ஆதிக்கத்திற்கு இன்னல் வரும் போது தனது முகமூடிகளைக் கிழித்து சுயரூபத்தைக் வெளிக்காட்டும்."

லெனின்.

சோவியத்யூனியனும் இதர சோசலிச நாடுகளும் மூன்றாவது உலக நாடுகளை நோக்கி தமது நட்புறவையும், அந்நாடுகள்முன்னேறுவதற்கான தொழில் நுட்ப நிதியுதவிகளையும் ஏற்றுமதி செய்துகொண்டிருக்கும் இவ்வேளையில் அமெரிக்க ஏகாதிபத்தியம் புதிய தொரு ஏற்றுமதியில் தன்னைத் தீவிரப்படுத்தி வருகிறது. அதுதான் மூன்றாவது உலக நாடுகளின் முற்போக்கு அரசுகளுக்கெதிரான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் 'சர்வதேச பயங்கரவாதம்'. சோவியத் யூனியனின் மீது கொண்ட காழ்ப்புணர்ச்சி, முன்னேற்றப் பாதையில் வந்துகொண்டிருக்கும் முற்போக்கு அரசுகளைக் கொண்ட மூன்றாவது உலக நாடுகள் சுபீட்சத்துக்கான இறுதி வழி மார்க்சிசமே என்பதை நிரூபிக்கப் போகின்றன என்ற அச்சம், முதலாளித்துவத்திற்கு முற்றுப் புள்ளி இடப்படும் காலம் நெருங்கி விட்டது. அதற்குள் எப்படியாவது முதலாளித்துவத்திற்கு உயிர் கொடுத்து விட வேண்டுமென்ற அவசரத் துடிப்பு இவற்றின் வெளிப்பாடே இன்று பாரியளவில், பகிரங்கமாகவே நிகழ்த்தப்படும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பயங்கரவாத ஏற்றுமதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தொடர்பான சர்வதேசக் கண்டனங்களையும் மீறி றேகன் நிர்வாகம் தொடர்ச்சியாக ஆத்திரமூட்டலை அதிகரிக்கும் வகையில் மூன்றாவது உலக நாடுகளின் முற்போக்கு அரசுகளைக் கவிழ்க்க முயன்றுவரும் பிற்போக்குச் சக்திகளுக்கான அரசியல், இராணுவ, நிதியுதவிகளை அதிகரித்து வருகிறது. கடந்த காலங்களில் சர்வதேசக் கண்டனங்களுக்குத் தயங்கி இரகசியமாகவே ஆப்கானிஸ்தான், நிக்கரகுவா போன்ற நாடுகளின் எதிர்ப்புரட்சியாளர்களுக்கு உதவி செய்து வந்த அமெரிக்கா தற்போது வியட்நாமில் தான் அடைந்த இரத்தக் காயத்தை மறந்து பகிரங்கமாகவே பயங்கரவாத ஏற்றுமதியை விருத்தி செய்யத்தொடங்கி விட்டது.

யுத்தவெறி பிடித்து அலையும் றீகன் நிர்வாகம், தனது கடந்தகாலக் காயங்களை மறந்துவிட்டது. அமரிக்காவின் உதவிப் பாதுகாப்பமைச்சர் கூறுகிறார் "அமரிக்கா இப்போது வேறுபட்ட ஒரு தேசம் அமரிக்கா மிகுந்த நம்பிக்கை கொண்ட நாடு றீகனின் தலைமையின் கீழ் அமரிக்கா வலிமை வாய்ந்த நாடு. நம் நினைத்ததைச் சாதிப்பதற்காக எவருக்கும் அஞ்சப்போவதில்லை." அதற்கும் ஒரு படி மேலே சென்று போர்வெறியன் றீகன் கூறுகின்றான்..."ஆப்கானிஸ்தானிலிருந்து... நிக்கரகுவா வரை ஒவ்வொரு கண்டத்திலும் தங்கள் உயிர்களைப் பணயம் வைத்து போராட்டம்(?) நடத்துபவர்கள் (எதிர்ப்புரட்சியாளர்கள்) எம்மீது வைத்திருக்கும் விசுவாசத்தை நாம் உடைத்து விடக்கூடாது. சோவியத் யூனியனின் அடக்குமுறையிலிருந்து அவர்களை விடுவித்து அவர்களது பிறப்புரிமைகளைப் பாதுகாக்க(?) உதவ வேண்டும்..."

இவர்களது கூற்றுக்கள் இவ்வாறிருக்க அமரிக்க இராசாங்க அமைச்சர் இந்த உலகில் இதுவரை காலமும் நடந்த அத்தனை புரட்சிகளுக்கும் எதிரான ஒரு புதிய ஜனநாயகப் புரட்சியை (?) செய்வதற்கு தமது நிர்வாகம் உந்து சக்தியாக இயங்கும் என்று சத்தியம் செய்கிறான். இந்த வகையில் அவன் சமீபத்தில் ஆற்றிய உரையொன்றில் "கடந்த காலங்களில் மேற்கத்திய நாடுகளுக்கு ஆதரவான அரசுகளுக்கெதிராக கம்யூனிஸ்டுகளால் தலைமை தாங்கப்பட்ட கொரில்லாக், கிளர்ச்சிப் போராட்டங்கள் நடந்தன. இப்போது வரலாறு திரும்புகிறது. நாங்கள் கம்யூனிஸ்ட் சர்வாதிகாரிகளுக்கெதிரான போராட்டங்களை முடுக்கி விடுவோம். கம்யூனிஸ்டுகளால் சர்வதேச சோசலிசத்துக்கான போராட்டங்களை நிகழ்த்த முடியுமென்றால் நாங்கள் உலக ஜனநாயகத்தை(?) பாதுகாக்கும்(?) போராட்டத்தை நடத்துவோம்." எனத் தத்துவ முத்துக்களைச் சிதறினான். றேகன் நிர்வாகம் வெறும் வார்த்தைகளினூடு நின்றுவிடாமல் தாங்கள் முதலிற் கவிழ்க்க வேண்டிய மூன்றாவது உலக நாடுகளின் பட்டியலையும் தயாரித்து இந்தத் தேசங்களினது முற்போக்கு அரசுகளைக் கவிழ்க்கும் 'புனித பணிக்கு' டொ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லர்களை வாரியிறைக்கத் தொடங்கி விட்டது. வெள்ளை மாளிகை யின் தீர்மானப்படி வியட்நாம், கம்போடியா, லாவோஸ், எதியோப்பியா, அங்கோலா, நிக்கரகுவா, ஆப்கானிஸ்தான், லிபியா, ஈரான் ஆகிய நாடுகளின் முற்போக்கு அரசுகளை விரைவில் கவிழ்த்துவிட றீகன் நிர்வாகம் துடிக்கிறது. சோசலிசம் என்ற சொல் கூட உலக அகராதியில் எஞ்சிவிடக் கூடாது. என்ற தீவிர முனைப்பில் செயற்படுகிறது.

இது தொடர்பான சர்வதேச மற்றும் உள்நாட்டு கண்டனங்களையும், விமர்சனங்களையும் றீகன் நிர்வாகம் அலட்சியப்படுத்தி முற்போக்கு அரசுகளைக் கவிழ்க்கும் 'புனிதப்பணி'ப்பற்றி பகிரங்கமாகவே செனட்டில் விவாதிக்குமளவிற்கு வளர்ந்துள்ளது. இத்தகைய விவாதம் ஒன்றின் போது சோசலிச அரசுகளுக்கெதிராக குழு ஒன்று போராடுகிறதென்றால் அக்குழு விரும்பிலென்ன விரும்பாவிட்டாலென்ன நாம் அவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும். அந்த எந்த வகையில் என்பதற்குத் தான் இந்த விவாதம்' எனப்பாதுகாப்பமைச்சரால் முன்வைக்கப்பட்டது. றீகன் நிர்வாகத்தின் இந்தத் தான்தோன்றித் தனமான போக்கிற்கு அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை கூட எந்தக் கடும் எதிர்ப்பையும் காட்டவில்லை

மாறாக றீகனின் சில குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி இந்த 'விடுதலை இயக்கங்களுக்கு' தாம்

விரும்பியபடி உதவி செய்யும் உரிமை றீகனுக்கு வழங்கப்படவேண்டுமென்றும் வற்புறுத்தி வருகின்றனர்.

இத்தகைய 'சுதந்திரப் போராளிகளுக்காக' (றீகனின் வார்த்தைகளில்) உதவி செய்வதற்குக் கடந்த சில மாதங்களில் முன்று உதவி வழங்கும் திட்டங்களை அமரிக்கப் பிரதிநிதிகள் சபை அங்கீகரித்துள்ளது. கடந்த மே மாதம் கம்போடியாவின் முன்னாள் அடக்குமுறையாளரும், கொலைவெறியாளர்களுமாகிய சொன்சான் சிகானுக் ஆகியோருடைய கூலிப் படைக்கு 5 மில்லியன் டொலர்களையும் பாகிஸ்தானிலிருந்து ஆப்கானிஸ்தானின் முற்போக்கு அரசுக்கெதிராக போராடும் 'முஜாகிதின்' என்றழைக்கப்படும் முதலாளித்துவக் கூலிப்படைக்கு இரகசியமாக வழங்கப்பட்ட பல நூறு மில்லியன் டொலர்களை விட பகிரங்கமாக 15 மில்லியன் டொலர்களை உதவியாக வழங்குவதென சபை தீர்மானித்துள்ளது. கடந்த யூன் மாதம் நிக்கரகுவாவின் ஸாண்டினிஸ்தியப் புரட்சி அரசைக் கவிழ்க்க முயலும் எதிர்ப்புரட்சியாளருக்கு 38 மில்லியன் டொலர்களை மனிதாபிமான உதவியாக வழங்கவும் சபை அங்கீகாரம் வழங்கியது. இந்த மனிதாபிமான உதவியில் பாரிய கனரக வாகனங்கள், சமிக்ஞைச் கருவிகள், கெலிகொப்டர்களும் அடங்கும் விந்தையையும் சபை அங்கீகரித்திருக்கிறது. இத்துடன் ஓயாத றீகன் நிர்வாகம் 1976 கிளாக் திருத்தச் சட்டத்தின் கீழ் தடுக்

கப்பட்டிருந்த அங்கோலாவின் அரச எதிர்ப்பாளர்களுக்கான (UNITA) உதவியை, மீழ வழங்கும் அங்கீகாரத்தையும் சபையிடமிருந்து பெற்று விட்டது ஆ-ல் இதற்கான அங்கீகாரம் சபையிடமிருந்து வருவதற்கு முன்னரே றீகன் நிர்வாகம் அங்கோலாவில் UNITA இற்கு அள்ளிக் கொடுக்கத் தொடங்கிவிட்டது.

இந்த உலகத்தையே தனது காலடிக்குக் கீழ்க் கொண்டு வந்துவிடத் துடிக்கும் றீகன், அரச நிர்வாகத்தின் மூலம் மாத்திரமன்றி கோடீஸ்வரர்கள், மற்றும் பெரும் முதலாளிகள் மூலமும் கம்யூனிசத்திற்கு எதிரான தனது 'விடுதலைப் போராளிகளுக்கு' பெருந் நிதியைச் சேகரித்து அளித்து வருகிறான். இந்தச் செயல்களை செய்யும் நிலையில் றீகனின் நெருங்கிய நண்பனான லேர்மன் என்பவன் முன்னணியில் இருக்கிறான். அமரிக்கச் சட்டத்தின் கீழ் தனி நபர்கள் இன்னுமொரு நாட்டின் அரசுகளைக் கவிழ்க்கும் செயல்களிலீடுபடுவது தவறாகக் கருதப்பட்டபோதும் றீகன் இத்தகைய செயல்களுக்குப் பூரண சுதந்திரத்தைக் கொடுத்துள்ளான். இதனால் அமெரிக்காவிலுள்ள மார்க்கிசத்துக்கு எதிரான தீவிர வலதுசாரிக் குழுக்கள் முற்போக்கு அரசுகளுக்கெதிரான பிரச்சார மற்றும் கவிழ்ப்புச் சதிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. எதிர்ப்புரட்சியாளருக்கு நிதி சேகரிப்பதில் முன்னணியில் நிற்கும் அமரிக்க ஏகாதிபத்தியத்தின் முந்நாள் ஐ.நா தூதுவரான கேர்க்பற்றிக் கவிழ்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களைப் புரட்சியாளர்கள் என்றும் அவர்கள் றீகனின் கொள்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் வெற்றியடையலாமெனவும் கூறி வருகிறு:

நீண்ட அரசியல் ஆதாயத்தின் அடிப்படையில் இன்று அமரிக்க ஏகாதிபத்தியத்தால் நிகழ்த்தப்பட்டு வரும் வெறித்தனமான சதிச் செயல்கள் பல. மூன்றுவது உலக நாடுகளின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாகின்றன. காலனித்துவங்களுக்கு எதிரான போராட்டங்களில் சிந்திய இரத்தங்கள் இந்தத் தேசங்களில் காய்வதற்கு முன்னர் இரத்த வெள்ளத்தைப் பாயவிட அமரிக்கா கொலை வெறி பிடித்து அலைகிறது. தனது கைக் கூலிக் கும்பல்களின் துணையுடன் அமரிக்க ஏகாதிபத்தியம் மூன்றுவது உலக நாடுகளில் நிகழ்த்திவரும் அக்கிரமச் செயல்களை இனி வரும் இதழ்களிற் பார்ப்போம்.

---

தோழர்களே,

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரான்ஸ் கிளையுடனான சகல தொடர்புகட்கும்...

EPRLF (FRACE BRANCH)
10, RUE DES MARTYRS
75009 - PARIS.

தொலைபேசி: 4874-98-30.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ மக்களின் மன உணர்வுகளை இந்தியா புரிந்து கொள்ளுமா....?

பாலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO) தென்மேற்கு ஆபிரிக்க மக்கள் இயக்கம் (SWAPO) ஆகியவற்றின் வரிசையில் தற்போது இந்தியா மேற்கு சகரா மக்களின் விடுதலைக்கான ஒரு சுதந்திர 'சரவி அரபு ஜனநாயகக் குடியரசை' (SADR) அமைக்கும் நோக்குடன் தம்மை ஆக்கிரமித்துள்ள அமெரிக்கக் கூலிகளான மொராக்கோ ஆட்சியாளர்களுக்கெதிராக ஆயுதப் போராட்டத்தை நிகழ்த்தி வரும் பொலிசாரியோ முன்னணிக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்தியாவின் இந்த அங்கீகாரம் பொலிசாரியோ, முன்னணிக்கு ஒரு சர்வதேச அந்தஸ்தைக் கொடுத்துள்ளது.

எங்கோ ஆயிரக் கணக்கான மைல்களுக்கப்பால் ஆக்கிரமிப்புக்கெதிராக, தங்கள் சுதந்திரத்திற்[illegible]கப் போராடிவரும் மேற்கு சகாரா மக்களின் மனவுணர்வுகளைப் புதிந்து பொலிசாரியோ முன்னணிக்கு அங்கீகாரம் வழங்கிய இந்தியாவின் முற்போக்குத் தனத்தைப் பாராட்டும் அதே வேளையில் இந்தியாவுக்கு வெகு அண்மையில் இரத்தத் துளிகளாகச் சிதறிக்கிடக்கும் ஈழத்தில் சாவுடன் போராடும் ஈழமக்களின் மனவுணர்வுகளைப் புரிந்துகொள்ளாது ... ஈழப் போராட்டத்தின் நியாயமான தன்மைகளை இன்னும் பகிரங்கமாக ஏற்றுக் கொள்ளாது... ஈழவிடுதலையியக்கங்கள் எதனையும் இதுவரை அங்கீகரியாது... சர்வதேசரீதியாக தனது அரசியல் நலனைக் கருதும் வகையில் இந்திய அரசு நடத்திவரும் அரசியல் சதுரங்க விளையாட்டு ஈழமக்களைப் பெருங் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஈழப் பிரச்சினை தொடர்பான இந்திய அரசின் இன்றைய போக்குகளை விமர்சிப்பது என்பது இந்திய எதிர்ப்புகளைக் கக்குகிறோம் என்று அர்த்தமாகாது. இந்தியாவின் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையும், மூன்றாவது உலக நாடுகளிலே இந்தியா வகிக்கும் உயர்ந்த இடத்தையும், சோசலிச நாடுகளுடனான இந்தியாவின் நட்புறவையும் நாம் மதிக்கிறோம். அனைத்துக்கும் மேலாக ஈழப் போராட்டத்தின் வெற்றிக்கு இந்திய ஆதரவு இன்றியமையாதது என்பதனையும் நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம். ஆனால் இவற்றிற்காக இந்தியா குறித்த ஈழ மக்களின் கனவுகள் சிதறிய நிலையை நாம் மறைத்துவிட முடியாது.

இந்தியாவுக்குள்ளேயும், இந்தியாவுக்கு அண்மையில் உள்ள நாடுகளிலும் இயங்கி வந்த புரட்சிகர சக்திகள் நசுக்கப்பட்டதில் இந்திய அரசு வகித்த பங்கு பற்றிய செய்திகள் ஈழ மக்களுக்குச் சரியாக எடுத்துச் சொல்லப்படவில்லை: விளைவு ஈழப்போராட்டத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக இந்தியா உருவகப்படுத்தப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டது. இந்தக் காகித நட்சத்திரம் காற்றில் பறந்து விடாது பின்னுக்கு நின்று தமிழர் விடுதலைக்கூட்டணியும், சில பல காரணங்களால் இந்தியாவில் தங்கி நிற்க வேண்டிய நிலையில் இருந்த இயக்கங்களும் தாங்கிப் பிடித்தன. இந்திய அரசின் குளுமிசங்களைப் புரிந்து கொள்ளாத இயக்கங்கள் தன் மீது வைத்த நம்பிக்கையைப் பாவித்தே இன்று இந்திய அரசு தனது அரசியல் சதுரங்க விளையாட்டை நிகழ்த்தி வருகிறது.

இந்திரா காந்தியின் ஆட்சிக் காலத்தில் ஸ்ரீலங்கா அரசுடன் ஓரளவு கண்டிப்பான உறவையே இந்தியா வைத்திருந்தது. ஆனால் இன்று நிலைமை முற்றிலும் மாறி விட்டது. ஈழ மக்களின் பிரச்சனைக்கான தீர்வு காணப்பட வேண்டும் என்பதை விட ஸ்ரீலங்கா அரசு தன்னைச் சுற்றியுள்ள விரோத நாடுகளின் பட்டியலில் இணைந்து விடாது தனக்கு நட்பு நாடாக இருக்க வேண்டும் என்பதற்கே இந்திய அரசு முன்னுரிமை கொடுக்கிறது. சந்தை வாய்ப்புக்களையும் தனது சொந்த அரசியல் நலன்களையும் மாத்திரம் சிந்திக்கும் முதலாளித்துவ அரசியல் உலகில் இந்திய அரசின் இந்தப் போக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை.

ஆனால் இந்திய அரசினால் அமைக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் நீளநீளமாகத் தொடர்ந்துகொண்டிருக்கும் போது தொடர்ச்சியாக எமது மக்கள் நூற்றுக் கணக்கில் கொல்லப்பட்டுக்கொண்டிருப்பது வெகு சாதாரணமாக இந்தியாவினால் அவதானிக்கப்பட்டு வருவது சரியா? 1இலட்சத்துக்கு மேற்பட்ட ஈழ அகதிகளுக்கு இந்தியா புகலிடம் கொடுத்திருப்பதையும், ஈழ விடுதலை இயக்கங்களின் செயற்பாடுகளுக்கு இந்தியா தளம் கொடுத்திருப்பதற்கும் ஈழ மக்கள் நன்றியுடையவர்கள். அதற்காகத் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் போர்வையில் போர் நிறுத்தம் என்ற சாக்கில் இயக்கங்களின் கைகள் கட்டப்பட்டு ஈழ மக்கள் தொடர்ச்சியாக இரத்த வெறி பிடித்த ஸ்ரீலங்கா படைகளாற் கொல்லப்பட்டு வருவதை இந்தியா சாதாரணமாக அவதானிப்பதைநாம் பொறுக்க முடியாது.

திம்பு இரண்டாவது பேச்சுவார்த்தைகளுக்காக இயக்கப் பிரதிநிதிகள் இந்தியாவினால் அழைக்கப்பட்டு எமது மக்களின் இரத்தத்தில் கைகளை நனைத்த ஸ்ரீலங்கா அரச பிரதிநிதிகளுடன் கரங்களைக் குலுக்கிய போது வவுனியாவிலும் திருமலையிலும் பல நூறு ஈழ மக்களின்சிதங்கள் ஆக்கிரமிப்பு வெறி நாய்களால் அறுக்கப்பட்டன. அதன் பின்னர் இன்றுவரை தொடரும் இந்தியாவின் சமாதான முயற்சிகள் ஸ்ரீலங்கா அரச படைகளின் வெறியாட்டத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க முன் வரவில்லை. ஈழ மக்களுக்குப் பாது காப்பு வழங்கிய இயக்கங்களின் கைகளைக் கட்டிப் போடவே வழி கோலியது. ஈழ விடுதலை இயக்கங்களின் முக்கியத்தலைவர்கள் மூவரை நாடு கடத்திய இந்திய அரசின் நடவடிக்கை இந்திய அரசு ஸ்ரீலங்காவை திருப்திப்படுத்த முயலுவதற்கு இன்னுமொரு நிரூபணமாக அ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தது. அதுமட்டுமல்ல இனப்படுகொலை நாயகனும் வரலாற்று ரீதியாக ஈழ மக்களுக்கெதிரான இனத்துவேஷக் கொள்கைகளை கொண்டவனுமான ஜெயவர்த்தனாவை நல்லவன்-சமாதானத்தை விரும்புபவன் என்ற வகையில் வர்ணித்து கட்டுப்பாடற்ற ஸ்ரீலங்காவின் படைகளே தமிழ் மக்களைக் கொன்றழித்து வருகின்றன என்று இனக் கொலையின் நாயகன் ஜெயவர்த்தனாவைப் பழியிலிருந்து தப்பவைக்கும் வகையில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி பி.பி.சி. நிருபருக்கு அளித்த பேட்டி இந்திய வெளிவிவகார அலுவல்களை முக்கியமாக இலங்கைத் தமிழர் பிரச்சனைகளுக்குப் பொறுப்பாக இருந்த திரு.பார்த்தசாரதியை ஸ்ரீலங்கா அரசின் வேண்டுகோளுக்கிணங்கி மாற்றி இப் பொறுப்புக்களை திரு.ரொமேஷ் பண்டாரியிடம் ஒப்படைத்த இந்திய அரசின் செயற்பாடு, இவை எல்லாமே ஈழ மக்களுக்கு வேதனை அளிக்கும் விடயங்கள் தான்.

பங்களாதேஷில் வெள்ளப் பெருக்கைப் பார்க்கச் சென்ற ஜெயவர்த்தனாவும் ராஜீவ் காந்தியும் ஈழத்தில் ஓடும் இரத்தவெள்ளத்தைப் பார்க்கவில்லை. பகாமாசிலும், ஓமானிலும் இலங்கைப் பிரச்சினையைப் பற்றிக் கலந்துரையாடுவது இவர்களுக்கு வேண்டுமென்றால் சர்வதேச அந்தஸ்தைத் தரலாம். ஆனால்ஈழ மக்களுக்கு .... ஏனென்றால் ஈழதேசத்தின் ஒவ்வொரு மூலையிலும் தினமும் அப்பாவி மக்கள் ஆக்கிரமிப்புப் படையினரால் படுகொலை செய்யப்பட்டு வருகிறார்கள். எங்கள் தேசம் தீயினால் எரிக்கப்படுகிறது போர் நிறுத்த நிபந்தனைகள் ஆக்கிரமிப்பாளரினால் மீறப்படுகின்றன... இந்தியா கண்மூடி நிற்கிறது. ஸ்ரீலங்கா அரசினால் கொலைவெறிபிடித்த சிங்களக் காடையர்கள் ஆயுதப்பயிற்சியும், ஆயுதங்களும் அளிக்கப்பட்டு ஈழத்தின் எல்லைப் பிரதேசங்களில் அனுப்பப்பட்டு வெறியாட்டம் ஆடி வருகிறார்கள். இந்தியா கண்மூடி நிற்கிறது. ஆக்கிரமிப்பு அரசின் கொலைவெறிச் சட்டங்கள் ஈழமக்களின் கழுத்துக்களை நெரிக்கிறது. -இந்தியா கண்மூடி நிற்கிறது. இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வேவழி என ஸ்ரீலங்காவின் அமைச்சர்கள் பகிரங்கமாகவே அறிக்கை விடுகிறார்கள்- ஆனால் இந்தியாவோ ஸ்ரீலங்கா அரசு சமாதானத் தீர்வில் நம்பிக்கை கொண்டுள்ளது.என அறிக்கை விடுகிறது. ஈழமக்களைக் கொல்வதற்கான நவீன ஆயுதங்களைக் கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்டிச் ஸ்ரீலங்கா அரசு வாங்கிக் குவிக்கிறது. ஆனால் இந்திய அரசோ இவற்றை உலகஅரங்கில் அம்பலப்படுத்தாது ஸ்ரீலங்கா அரசை சமதானத்தை விரும்பும் ஒரு நண்பன் என்று கூறி அரவணைத்து நிற்கிறது. இந்தியாவின் இந்த புதிய நிலைப்பாடு இன்று அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வெளிவிவகார அமைச்சே இலங்கைப் பிரச்சனையில் இந்தியாவின் நிலைப்பாடே தமது நிலைப்பாடு என அறிக்கைவிடத் தூண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழப் பிரச்சினை தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாடு இப்படி இருக்கையில் தொடர்ச்சியாக ஈழவிடுதலை இயக்கங்கள் தனக்கு ஆதரவுத் துதி பாடும் என இந்தியா எதிர்பார்க்கக் கூடாது. ஈழவிடுதலை இயக்கங்களும் இந்திய அரசின் நிலைதொடர்பான உண்மையான நிலைகளை ஈழ மக்களுக்குக் கொண்டுவாவேண்டும். தொடர்ச்சியாக இந்திய அரசின் பிழையான செயல்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்க முடியாது. இந்தியா தொடர்பான கனவுகளில் வாழும் ஈழ மக்களை நனவுலகத்திற்குக் கொண்டு வர வேண்டும். எங்கள் கால்களில் எங்கள் பலத்தில் எழுந்து நிற்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்த வேண்டும். இதன் அர்த்தம் இந்திய அரசை எதிர்த்தல் அல்லது விரோதித்துக் கொள்ளுதல் என்பதல்ல. எமது பிரச்சனைகளுக்கான இறுதித் தீர்வை நாமே தேட முற்படுதல் தான்.

எங்கோ ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பபால். போராட்டம் நடத்தி வரும் மக்களின் மனவுணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்களின் போராட்டங்களை அங்கீகரித்து வரும் இந்தியா தனது சொந்த அரசியல் இலாப-நட்டங்களை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு சிந்தித்தால் உண்மை புரியும். ஈழ மக்களின் பிரச்சனைக்கான தீர்வு மாகாண, மாநில சபைகளோ அல்ல சுதந்திரமான ஈழமே என்பது. பெரும்பான்மை ஈழமக்களின் நியாயமான இந்த மனவுணர்வை இந்திய அரசு புரிந்து கொள்ளுமா? புரிந்து கொள்ள வேண்டும் என்பது தான் ஈழ மக்களின் நோக்கு.

தோழர்களே!!

வாள் முனையிலும் பேனா முனை வலிமை உடையதே. 'தமிழ் முரசு' உங்கள் விடுதலைப் போராட்டத்துடன் தொடர்பான கதைகள், கவிதைகள் கட்டுரைகள், சித்திரங்கள் ஆகியவற்றைப் பிரசுரிக்கக் காத்திருக்கிறது. உங்கள் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி இதோ

THE EDITOR
TAMIL MURASU
TAMIL EELAM LIBARATION COUNCIL (FRANCE)
10, RUE DES MARTYRS
75009 - PARIS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி வெற்றி பாலஸ்தீன மக்களுக்கே

பாலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டம் தினமும் பச்சை இரத்தத்தில் குளித்துக்கொண்டிருக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதனுடைய செல்லக் குழந்தையான இஸ்ரேலிய சியோனிஸ்டுகளும் தொடர்ச்சியாகப் பாலஸ்தீன மக்களின் குரல்வளைகளை தங்களது நீசக் கரங்களால் நெரித்து வருகின்றன. தமது தாயக மீட்புக்காக பாலஸ்தீன மக்கள் நிகழ்த்தி வரும்போராட்டத்தை வேரறுத்து விட வேண்டும் என்பதற்காக தினந்தோறும் புதியபுதிய சதிகளை அமெரிக்க ஏகாதிபத்தியமும் இஸ்ரேலும் இணைந்து கட்டவிழ்த்து வருகின்றன.

பாலஸ்தீனப் பிரச்சினை இன்றைய உலகின் முன்னிருக்கும் முக்கிய பிரச்சனை என்ற நிலையை அடைந்து பாலஸ்தீன மக்களின் பிரச்சனைகட்கு தீர்வு ஒன்று காணப்பட்டே தீர வேண்டும் என்கிற நிலைக்கு மொத்த உலக நாடுகளும் தள்ளப்பட்டு அது குறித்த நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டிருந்த நேரம் ஜோர்டானுடன் இணைந்து பாலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO) பாலஸ்தீன மக்கள் சுய நிர்ணய உரிமையுடன் வாழுவதற்காக வகுத்த திட்டம், உலக நாடுகளால் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு பரிசீலனைக்கு எடுக்கப்பட்ட காலகட்டம், காலாகாலமாக சியோனிஸ்டுகளுக்கு வக்காலத்து வாங்கி வந்த பிரித்தானிய அரசின் வெளிநாட்டமைச்சர் கூட PLO வின் இரு பிரதிநிதிகளை அதிகாரபூர்வமாக சந்திப்பதற்கான காலநேரத்தை நிச்சயித்து விட்ட வேளை, ஐரோப்பிய சமூக (EEC) நாடுகளின் பிரதிநிதிகளும் PLO பிரதிநிதிகளுடன் சந்திப்பை மேற்கொள்ளவிருந்த சமயம் அனைத்தையும் விட பாலஸ்தீன மக்களின் ஏகோபித்த தலைவரும், PLO வின் தலைவருமான யசீர் அரபாத் ஐ.நா சபையின் 40ஆவது ஆண்டுக்கூட்டத் தொடரில் கலந்து உரையாற்ற வேண்டுமென்ற கோரிக்கை ஐ.நா சபையில் பெரும்பான்மை நாடுகளால் முன்வைக்கப்பட்டிருந்த நேரம் ... தொடர்ச்சியாகப் பாலஸ்தீன மக்களின் போராட்டங்களுக்கெதிராக சதிகளைக் கட்டவிழ்த்து வரும் இஸ்ரேல் ...லெபனனில் பாலஸ்தீன விடுதலையியக்கத்தை நிராயுதபாணியாக்கி அங்கிருந்து PLO வை வெளியேற்றியதால் PLO வை இராணுவ ரீதியாக தோற்கடித்து விட்டோம் என மனப்பால் குடித்த இஸ்ரேல்... அரசியல் ரீதியாகச் சர்வதேச அரங்கில் PLO வுக்கு கிட்டிவரும் அரசியல் அங்கீகாரத்தையும், அரசியல் வெற்றிகளையும் கண்டு குமுறியது. இரத்தத்தில் நனைந்து பழக்கப்பட்ட அதனது நீசக் கரங்கள் மீண்டும் இரத்தத்தைத் தேடிக் குறுகுறுத்தன. விளைவு இஸ்ரேல் சர்வதேசச் சட்டங்கள் அனைத்தையும் அலட்சியம் செய்து தன்னுடைய

அமெரிக்க ஏகாதிபத்திய எஜமானின் துணையோடு அமெரிக்காவின் 'நேச' நாடு என்றுகூடப் பார்க்காமல் துனிசியாவிலுள்ள பாலஸ்தீன விடுதலையியக்கத்தின் தலைமைக் காரியாலயத்தை தனது விமானங்களை அனுப்பிக் குண்டு வீசித் தகர்த்தது.

சர்வதேசச் சட்டவிதிகளை மீறி இன்னொரு நாடு ஒன்றினுள் அத்துமீறிப் புகுந்து குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தி 70 க்கும் மேற்பட்ட அப்பாவி உயிர்களைக் கொன்றழித்த இஸ்ரேலின் இந்த வெறியாட்டத்தை சர்வதேசப் பயங்கரவாதத்தின் தந்தை ஆன றீகன் 'சரியான இலக்கைத் தேர்ந்தெடுத்து நிகழ்த்தப்பட்ட திட்டமிட்ட தாக்குதல்' என்று தட்டிக் கொடுத்தான். இது இஸ்ரேல் இனது சரியான இலக்கு அல்ல. இஸ்ரேலின் சரியான இலக்கு யசீர்அரபாத். 10 நிமிடம் அலுவலகத்துக்குத் தாமதமாக வந்ததால் அரபாத் மயிர் இழையில் உயிர் தப்பினார். பாலஸ்தீன மக்களின் உந்து சக்தி யார் எனப் பார்த்து அவரைக் கருவறுக்க இஸ்ரேல் முயன்றது. ஏற்கனவே 49 தடவைகள் இஸ்ரேலின் கொலைவெறிச் சதிகளிலிருந்து உயிர் தப்பிய அரபாத் 50ஆவது தடவையுந்தப்பினார்

இதில் வெட்கக்கேடான விடயம் என்னவென்றால் அரபு நாடுகளாக இருந்த போதும்... பாலஸ்தீன மக்களின் உடன்பிறப்புகளாய் இருந்தபோதும் அமெரிக்க விசுவாசத்தின் காரணமாய் சவூதி அரேபியா, மொராக்கோ ஆகிய நாடுகளும் அரபாத்தின் மீது கொண்ட எதிர்ப்புணர்ச்சி காரணமாய் சிரியா, லிபியா ஆகிய நாடுகளும் இத்தாக்குதல் பற்றிய தகவல்கள் ஏற்கனவே கிடைத்தும் அதனைத் துனிசியாவிற்கு அறிவிக்காது மறைத்தன. எது எப்படியிருப்பினும் இஸ்ரேலின் இந்த அத்துமீறல் PLO வின் அரசியலுக்கு வெடிப்புக்களுக்கு மேலும் ஒரு வெற்றிப்படியாக அமைந்தது.

அதற்கிடையில் றீகனின் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த70 பிரதிநிதிகளும், இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சும், பிரித்தானிய அரசு PLO பிரதிநிதிகளைச் சந்திக்கக்கூடாது என மிரட்டினர். போர்வெறியன் றீகனின் ரசிகையான 'இரும்புப் பெண்மணி' (?) மார்கிரெட் தட்சர் ஆயுதப் போராட்டத்தை PLO கைவிடும் என எழுதி கையொப்பமிட்டுத் தந்தால்த் தான் PLO பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நிகழ்த்துவேன் என ஒரு ஏற்கமுடியாத நிபந்தனையை விதித்தார். PLO பிரதிநிதிகள் அந்நிபந்தனையை ஏற்கமறுத்ததுடன் ஆயுதப் போராட்டம் தொடர்பான PLO வின் ஏற்பு நிலையை மீள உறுதிப்படுத்தினர். சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டது. PLO வுக்கெதிரான முதற்கட்டச் சதி முடிந்து இரண்டாம் கட்டச் சதி ஆரம்பமாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







PLF தலைவர் அபுல் அபாஸ்.

இந்த இரண்டாவது சதியின் அம்சமதகவே இத்தாலிய உல்லாசப் பயணிகள் கப்பலாகிய கில்லி லாரோ (ACHILLE LAURO) இனந்தெரியாத நால்வராற் கடத்தப்பட்டு அதில் பயணம் செய்தவர்கள் பெரும்பான்மை அமெரிக்கர்கள் பணயக் கைதிகளாக்கப்பட்டனர். இந்தக் கப்பற் கடத்தலைச் செய்தது PLO வின் ஒரு பிரிவான PLF ஐச் சேர்ந்தவர்கள் என்று முதலாளித்துவ செய்தி தாபனங்கள் தகவல் வெளியிட்ட போதும் பாலஸ்தீனிய வட்டாரக் கருத்தின்படி இவர்கள் மொசாட்டைச் சார்ந்தவர்கள் எனக் கருதப்படுகிறது. மேற்படி கப்பல் கடத்தல் பிரச்சனையைத் தீர்த்து பயணக் கைதிகளை விடுதலை செய்வதில் எகிப்து பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் இணைந்து எடுத்த முயற்சிகள் வெற்றியளித்தன. PLO தலைவர் யசீர் அரபாத் கடத்தல்காரருடன் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக PLF இன் தலைவரும் PLO நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான அபுல் அபாசை அனுப்பினார். பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிவடைந்து பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். கடத்தல்காரர்கள் எகிப்திய அரசு அளித்த வாக்குறுதிப்படி பாதுகாப்பாக எகிப்தில் இருந்து வெளியேறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கட்டத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனதுகொலைக் கரங்களை நீட்டியது. கடத்தற் காரரைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி எகிப்திடம் கோரிக்கை விட்டது. கடத்தற்காரரைப் PLO வினர் என்று கூறி PLO வை கொலைவெறிக்கும்பலாக வருணித்து செய்திகளைப் பரப்பியது. துனிசியாவில் இஸ்ரேலிய விமானக் குண்டு வீச்சில் 70க்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டபோது கைகொட்டிச் சிரித்த ஏகாதிபத்தியம் - கப்பல் கடத்தல் சம்பவத்தில் ஒரு அமெரிக்கப் பிரஜை கொலை செய்யப்பட்டதை மனித குலத்துக்கே இழைக்கப்பட்ட அநீதி எனக் கூறி அலறித் துடித்தது. அதேவேளையில் இப் பிரச்சினைக்கு ஒரு சுமுகத் தீர்வைக் கண்டு எகிப்தை மீண்டும் அரபுலகத்துடன் இணைத்துக் கொள்ளத் துடிக்கும் எகிப்திய ஜனாதிபதி கொஸ்னிமுபாரக் PLO தலைவர் யசீர் அரபாத் துடன் தொடர்பு கொள்ள அரபாத் இப்பிரச்சினையைக் கடத்தற்காரருடன் பேசித் தீர்க்க PLF தலைவரான அபுல் அபாசை எகிப்துக்கு அனுப்பினார். கடத்தற்காரருடன் பேச்சுவார்த்தை நடத்திய அபுல் அபாஸ் கடத்தற்காரரைப் பாதுகாப்பாக எகிப்துக்கு வெளியே அவர்கள் போக விரும்பும் இடத்திற்கு அனுப்பி வைப்பதாக எகிப்திய அரசின் அனுசரணையுடன் வாக்குறுதியளித்ததை அடுத்துப் பயணக்கைதிகளான பிரயாணிகளை விட கடத்தற்காரர்கள் சம்மதித்தனர்.

பணயக் கைதிகள் திட்டமிட்டபடி விடுவிக்கப்பட்டதும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது நீசத்தனத்தைக் காட்ட ஆரம்பித்தது. கடத்தற்காரரைத் தன்னிடம் கையளிக்குமாறு எகிப்தை மிரட்டியது. ஆனால் எகிப்தோ கடத்தற்காரர்கள் எகிப்தில் இருந்து புறப்பட்டுவிட்டதாகக் கூறியது. இக்கட்டத்தில் எகிப்திய அரசு மிகக் கேவலமான கொச்சைத்தனமான திட்டுக்களைத் தனது அமெரிக்க எஜமானிடமிருந்து கேட்க நேரிட்டது. இதன் பின்னர் அபுல் அபாசையும், கடத்தற்காரரையும் கொண்டு எகிப்திய விமானம் எகிப்தை விட்டுப் புறப்பட்ட சிறிது நேரத்தில் சர்வதேசச் சட்டவிதிகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டு உலகக் கொள்ளையர்களான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விமானங்களால் எகிப்திய விமானம் இத்தாலிக்கு மிரட்டலின் மூலம் கடத்தப்பட்டது. பூமிப்பந்தின் மீதுள்ள நாடுகளின் மீது மட்டுமல்ல வானிலும் தான் அடக்குமுறை ஆட்சி நடத்துவேன் எனத் தனது அக்கிரமத்தனத்தால் நிருபணம் செய்தது அமெரிக்க ஏகாதிபத்தியம். இத்தாலியில் வைத்துக் கடத்தற்காரர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டனர். அதே வேளையில் தலைவர் அபுல் அபாசையும் தன்னிடம் கையளிக்க வேண்டும் என்று அமெரிக்க ஏகாதிபத்தியம் இத்தாலிய அரசை மிரட்ட ஆரம்பித்தது. பாலஸ்தீனிய மக்களின் போராட்டத்தின் பால் அனுதாபம் கொண்ட இத்தாலியப் பிரதமர் கிறக்சி, அபுல் அபாசைக் கையளிக்க மறுத்ததுடன் அவரை நாட்டை விட்டு யூக்கோசிலவாக்கியாவுக்கு வெளியேற (இக்கட்டத்தில் அபுல் அபாஸ் ஏற்கெனவே தந்திரமாக விமான ஊழியரின் சீருடையில் யூக்கோஸ்லவியா சென்று விட்டார். இதனால் ஏற்பட்ட சர்ச்சை கிறக்சியின் இத்தாலிய அர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைக் கவிழ்த்தது. இதற்குள் அபுல் அபாசைக் கையளிக்கவேண்டும் என்ற அமெரிக்க ஏகாதியத்தியத்தின் வேண்டுகோளை யூக்கோஸில வாக்கியாவும் நிராகரித்தது.

எகிப்திய விமானம் கடத்தப்பட்ட செயல் எகிப்து மக்களின் பெருங்கோபத்தைத் தூண்டியது. எகிப்து முழுவதும் மக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கெதிராக பெரும் ஆர்ப்பாட்டங்களை நிகழ்த்தினர். கண்ட இடங்களிலெல்லாம் அமெரிக்கர்கள் அடித்து நொருக்கப்பட்டனர். எகிப்திய சுவர்கள் "எங்களுக்கு டொலர்கள் வேண்டாம் எங்களுக்கு நாட்டின் தனித்துவமே வேண்டும்என்ற சுலோகங்களைத் தரித்தன" சீற்றங்கொண்ட எகிப்திய ஜனாதிபதி முபாரக் அமெரிக்க ஏகாதிபத்தியம் தம்மிடம் மன்னிப்புக் கோரவேண்டும் என்று கோர றேகன் ஒருபோதும் மாட்டேன் எனக் கூறி மன்னிப்புக் கோர மறுத்தான்.

கடத்தற்காரர்கள் தற்போது இத்தாலிய நீதி மன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். இவர்கள் மொசாட்டினது ஏஜண்டுகளா அல்லது அரபாத்துக்கு எதிரான பிரிவுகளைச் சேர்ந்தவர்களோ என்பது இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை. அப்பாவி மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடக்கூடாது என்ற நன்நோக்கில் PLO எடுத்த நல்ல நடவடிக்கைகள் யாவும் முதலாளித்துவ செய்தித் தொடர்பு ஸ்தாபனங்களால் மறைக்கப்பட்டு PLO வை இக் கடத்தலுடன் தொடர்புபடுத்தி பொய்ச் செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

ஆனால் இச்சம்பவம் உண்மையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நச்சுத்தன்மையைத் தோலுரித்துக் காட்டியிருக்கிறது. தனது நட்பு நாடாக துனிசியா இருந்தபோதிலும் இஸ்ரேல் துனிசியாவில் குண்டுவீச்சு நடத்த உதவி செய்ததுடன் தாக்குதலைத் தட்டிக்கொடுக்க ஏகாதிபத்தியம் தயங்கவில்லை. வருடத்துக்கு 2 பில்லியன் டொலர்கள் நிதி மற்றும் கடனுதவி கொடுத்து அரபுலகிலிருந்து பிரித்துத் தனது நன்றியுள்ள சேவகனாக மாற்றியும் எகிப்தை மிரட்டவும் அதன் விமானத்தைக் கடத்தவும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தயங்கவில்லை. நேட்டோக் கூட்டில் ஒரு நாடும் அமெரிக்க விசுவாச நாடுமான இத்தாலியின் அரசை மிரட்டி அது பலிக்காமற் போக அதைக் கவிழ்க்கவும் அது தயங்கவில்லை.

ஆனால் தனது நிறத்தை மாற்றிக்கொள்ளாத; குணத்தை மாற்றிக்கொள்ளாத ஆதிக்க வெறிபிடித்தலையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அத்தனை சதிகளையும் மீறி பாலஸ்தீன மக்களின் வீரமிகு விடுதலைப் போராட்டம் வெற்றி பெறும். தனது நச்சுக்கரங்களால் ஒடுக்கப்பட்ட மக்களின் குரல் வளைகளை நசித்து இரத்தம் குடித்து வரும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தோற்றுப் போகும் இது வரலாற்றுக் கட்டாயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியென்றொரு



செல்வம் -

"சுவை புதிது, பொருள் புதிது,
வளம் புதிது சொற்புதிது சோதிமிக்க
நவ கவிதை எந்நாளும் அழியாத மகாகவிதை"

"நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்குழைத்தல்
இமைப் பொழுதும் .... சோராதிருத்தல்"

என்று
தன்னையே தான் தமிழுக்கு அறிமுகப்படுத்தி புரட்சிப் புயலாகப் புகுந்தான் பாரதியென்றொரு மானிடன். அடிமை நாட்டிலே பிறந்து விருதலைப் பாடல்களைப் பாடியவன். இவனின் பாடல்களும் வாழ்க்கையும் இன்று ஈழத்தில் ஏற்பட்டு இருக்கிற புரட்சிகர நிலைமைகளில், துன்பகரமான இந்த வேளையில், ஈழத்துக் கவிஞர்களுக்கும், ஈழத்து மக்களுக்கும், தெவிட்டாத தேனை ஆறுதல் தரும் மருந்தாகக் காணப்படுகிறது.

"புன்னகையும் மின்னிசையுமெங்கெழிந்து போயினவோ
இன்னலோடு கண்ணீருருகிப் போய் விட்டனவோ"

என அவன் அழுது பாடிய பாடல்கள் இன்று ஈழத்துக்கு ஏற்பனவாகி ஏதோ எங்கள் நிலையை எண்ணிப் பாடியது போல் தோன்றுகின்றது.

தமிழ்க் கவிதை இலக்கியத்தில் 12ம் நூற்றாண்டில் கம்பனுக்குப் பிறகு 18ம் நூற்றாண்டு பிற்பகுதி அல்லது 19ம் நூற்றாண்டு முற்பகுதியில் பாரதி தோன்றும் வரை வெறும் பாலைவனமே காட்சியளிக்கின்றது.

மானிடத்தைப் பாடிய கம்பனுக்குப் பிறகு மனிதனை நினைத்தவன் பாரதி. இந்த இடைவெளி நூற்றாண்டுகளில் கவிதைகள் எழுதப்படவில்லை என்று இல்லை. எழுதப்பட்டவை தான். ஆனால் அவையெல்லாம் சொற்களின் விளையாட்டாக எதுகை மோனை வடிவங்களாக இருந்தனவொழிய கருத்துக்கள் கிடைக்கவில்லை. தனிப்பாடல்களாக தேவார திருவாசகங்களாக இறைவனைக் காதலை, பெண்ணை, பாடிய பாடல்களாகவே இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் புயல் புகுந்ததால் தமிழ்த் தாய் சிலிர்த்தாள். கம்ப னுக்குப் பிறகு கவிதைகளைச் செய்தவன் பாரதி. தான் எடுத்துக் கொண்ட செய்திக்கு மிகமிக நேர்மையாக இருந்தான். பல வேளைகளில் முரண்பாடான கருத்துக்களைச் சொல்வான். சொல்லும் போது தான் எடுத்துக் கொண்ட கொள்கையைக் கட்டாயம் நிறுவுவான்.

சோவியத் நாட்டில் புரட்சி ஏற்பட்டபோது அதற்கு மாகாளி பராசக்தி தான் காரணம் என்று நினைப்பதற்குப் பதப்பட்டுப் போன ஆஸ்திகன் "ஆகா என்று எழுந்தது யுகப்புரட்சி மாகாளி பராசக்தி துணை செய்தாள்" என்று தான் எடுத்துக் கொண்ட கருத்தை சொல்லுகிறன். வேதம் படித்தவன். சிறு வயது தொடக்கம் ஆரியக் கருத்துக்களுக்கு ஆட்பட்டவன் ஆனல் அந் நாளில் பூணூல் கட்டாத பார்ப்பனன் என்றல் பாரதி தான். வேதப் பற்றுக்கொண்ட பாரதி எப்படி வேதத்தில் வருகின்ற ஒரு கருத்தைச் சாடுகிறன் என்றல் அதாவது வேதத்தினில் எல்லாம் மாயை எல்லாம் பொய் என்ற கருத்து இருக்கிறது. அப்படியானல் வேத ரிசி சங்கடாச்சாரியாருக்கு தேள் கொட்டினல் கொட்டுகிற தேளும் பொய் வலியும் பொய்யா? எனக் கேட்கின்றர்.

"நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே நீங்களெல்லாம்
சொற்பனந்தானே? பல தோற்ற மாயங்களோ?.
காண்பது உறுதி கண்டோம் காண்பதல்லால் உறுதி
(இல்லை

காண்பதுவே சக்தியாம் இந்தக் காட்சி நித்தியமாம்

என்ற பாடல் இந்தக் கருத்தைச் சாடுகின்றன. ஆக தான் ஏற்றுக்கொண்ட கருத்தைச் சொல்லுவான் அந்தக் கருத்துப் பிழை என்று கருதும் போது அதை மாற்றிச் சொல்லுவான்... மானிடத்தை முன்நிறுத்தித் தன்னைப் பின்னுக்கும் தன்மை இதன் மூலம் அறிவிக்கின்றன்.

ஐயா ஐங்கார் சர்மா சாஸ்திரி கணக்கன் செட்டி சேடன் வடுகன் வண்ணன் தொம்பிலி பறையன் என்று இப்படி தமிழினத்தை ஆயிரம் சாதிகளாகப் பிரித்தார்களே அல்லது இது தேவ செயல் என்று சென்னவர்களே பார்ப்பனர்கள் தான். ஆனல் பார்ப்பன குலத்தில் தோன்றிய பாரதி சாதியமைப்பை சாடியது போல் இன்றுவரை யாரும் சாடவில்லை.

பாரதியின் மானிட நேசத்தை கவிதைகள் முழுக்கத் தெளித்து இருக்கிறன். கல்விக்கு உறுதுணை என்று சைவர்களால் நம்பப்படுகிற சரஸ்வதியைப் பாடும் போது

"வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத்திருப்பாள்"

எனப் பாடிய பாரதி அவளுக்கு எப்படிப் பூசை செய்யவேண்டு மென்று சொல்லும் போது

"வந்தனம் இவளுக்குச் செய்வதென்றால்
வாழியஃதிங் கெளிதன்று கண்டீர்"

மந்திரத்தை முணுமுணுத்தல் சந்தன மலரையிடுதல் இவையெல்லாம் வழியல்ல என ஏராளம் செய்து

"வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
தேடு கல்வியிலாததொரூரைத்
தீயினுக்கிரையாக மடுத்தல்"

இது தான் சரஸ்வதிக்குச் செய்யும் பூசையெனச் சொல்லுகிறான் இப்படியொரு கனிவும் கவிதையும் இவருக்கு முன்னும் பின்னும் எவர்க்கும் இருந்ததில்லை.

இப்படிப் பாரதியின் பெருமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் தமிழ் இனம் அவனுக்குச் செய்த நன்றி யாரும் போது அவன் உண்ண உணவின்றி உடுக்க நல்ல உடையின்றி வாழ்ந்தான்.

மக்களைத் தூண்டி விட்டான் என்ற பெயரில் ஆங்கில அரசால் தேடப்பட்டபோது நாயாக அலைந்தான். நன்றி மறந்த தமிழ்ச் சாதி அவன் மனைவியை அவன் இறந்த பின் பிச்சைஎடுத்துண்ணும் நிலைமைக்கு விட்டது. செல்லம்மாள் பாரதி பிச்சை எடுத்து உண்டாள் என்று சொல்வார்கள்.

அவன் இறப்பைப் பாடிய வைரமுத்து அவனின் உடலை மொய்த்த ஈயளவு கூட ஆட்கள் இல்லையென்றார். அவன் இறந்த போது நாலு பேர் மாத்திரம் தான் தூக்கினர்கள். பொதுவுடமைச் சிற்பி சிங்காரவேலன் பாரதிதாசன் ஜீவா நாராயணதுரைக்கண்ணன் என்ற பொதுவுடமை வாதிகளே அந்த நால்வரும். மானிடத்தைப் பாடிய படியால் பாரதி மனிதர்களால் மதிக்கப்படாமல் போனன்.

"கண்ணிரண்டும் விற்று சித்திரம் வாங்கினல்
கைகொட்டிச் சிரியாரோ"

எனப் பாடிய பாரதியை நாங்கள் என்றும் நினைத்துப் பார்க்க வேண்டிய நேரம் இது. சுதந்திர பாரதத்தைக் கனவு கண்ட பாரதி அது கிடைக்க முதலே இறந்து போனன்.

அவனின் வாழ்வு, கவிதை, காலாகாலத்து நிலைத்து நிற்பதற்கு ஏற்றவாறு இன்று தமிழரின் நிலைமை இருக்கிறது.

Digitized by Noolaham Foundation

# தென்னாபிரிக்காவும் பத்திரிகைச் சுதந்திரமும்

சில பக்கங்கள்

ஜனா சுகிர்தன்



பத்திரிகைச் சுதந்திரத்தின் மீதான நெருக்குவாரம் அதிக
ரித்து வரும் இந்தக் காலகட்டத்தில் தென்னாபிரிக்க இன வெறி அ
ரசின் வெளிப்படையான, காட்டுமிராண்டித் தனமான நடவடிக்கை
ஒன்று உலகத்தினது கவனத்தை ஈர்த்திருக்கிறது. அதாவது, அது
தனது பொதுப் பிரகடனம் ஒன்றின் மூலம் - குறிப்பாக வெளி
நாட்டுப் பத்திரிகையாளர்களின் சுதந்திரமான நடவடிக்கைகளிற்கு
ஆப்பு வைத்திருக்கிறது. தென்னாபிரிக்க அரசினால் அவசர அவசரம்
ஆகக் கொண்டு வரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை பற்றி 'FINANC-
IAL TIMES' பின்வருமாறு அறிவிக்கின்றது. "தொலைக்காட்
சி, வானொலி, பத்திரிகைச் செய்திச் சேகரிப்புப் போன்ற விட
யங்களில் மிகக் கடுமையான கட்டுப்பாடுகள் அமுலுக்குக் கொண்டு
வரப்பட்டுள்ளன. அவசரகாலச் சட்டம் அமுலிலுள்ள இடங்களில்
அமைதியின்மை, வேலைநிறுத்தம், பகிஷ்கரிப்பு தொடர்பானசெய்
திகளைச் சேகரிக்க தொலைக்காட்சியாளர், ,வானொலிப் பதிவா
ளர், புகைப்படக் காரர் ஆகியோர் பொலிஸ் அனுமதியின்றி அனு
மதிக்கப்பட மாட்டார்கள், பொலிசாரின் உதவியுடனேயே அவர்
கள் அவ்விடங்களுக்குச் செல்ல முடியும். மேற்படி பகுதிகளில் நின்
ற பத்திரிகையாளர் உடனடியாக வெளியேற்றப்பட்டுள்ளனர்"

அண்மைக் காலமாக சர்வதேச பத்திரிகைகள் தென்னாபிரி
க்காவில் நடைபெறும் இனப்படுகொலைகளுக்கு எதிராகக் குரல்

கொடுத்து வருவதே இப்புதிய கட்டுப்பாடுகளின் பிரசவத்திற்கான காரணமாகும். நாட்டைப் பற்றிய 'பொய்த் தகவல்கள்' வெளியே போகின்றது என்ற 'கவலையினால்' அது தனது ஆதிக்கத்தைப் பத்திரிகையாளர் மீதும் பிரயோகித்துள்ளது. தணிக்கை தொடர்பான அறிவிப்பு வந்தவுடனேயே உலகளாவிய ரீதியில் தென்னாபிரிக்க அரசு விமர்சனம் ஒன்றுக்கு உள்ளாகியுள்ளது.

"வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை அடக்க தென்னாபிரிக்க அரசு அறிமுகப்படுத்தியிருக்கும் கட்டுப்பாடுகள் தர்க்கரீதிக்குட்பட்டதல்ல" என்று லண்டனிலிருந்து வெளிவரும் THE DAILY TELEGRAPH (29.10.85) தனது ஆசிரியர்த் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது. அது மேலும் தெரிவிப்பதாவது :- "அபாயகரமான செய்திகளின் பெருக்கத்தை மட்டுப்படுத்தி விடுவதன் மூலம் தென்னாபிரிக்கா ஒரு பாதுகாப்பான, சுத்தமான, இனிமையான, இடமென உலகம் நம்பத் தகுந்து விடும் எனத் தென்னாபிரிக்க அரசாங்கம் நினைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், அது அப்படியாகாது. தென்னாபிரிக்க அரசினால் போடப்படும் கட்டுப்பாடுகள் அதனை மேலுமொரு பாசிச, அடக்குமுறை அரசாகவே வெளியுலகினுக்குக் காட்டும்"!

"வெநாட்டுப் பத்திரிகையாளர் மீதான நடவடிக்கையின் மூலம் பிறிரோறியா இரட்டைச்சதுரங்கம் ஒன்றை மீள நினைவூட்டுகிறது" என 'LE MATIN' எழுதியுள்ளது.

20ம் நூற்றுண்டின் முதலாளித்துவப் பசிக்கு புதிய பரிமானங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கும் குருட்டுத் தீவிரம் தற்போது பல மடங்குகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. சில மாதங்களிற்கிடையில் மட்டும் 800க்கும் மேற்பட்டோரது உயிரை அது பலியெடுத்திருக்கின்றது. இதற்குள் விடுதலைப் போரில் முன்னணி வகித்த தேசியத் தலைவர்கள், ஒரு கவிஞர் ஆகியோசியோர் அடங்குவர்.

தென்னாபிரிக்க அரசு தான் நினைத்தவை அனைத்தையுஞ்சாதித்து விடலாமென்று கனவு கண்டுகொண்டிருக்கிறது. உலகின் அபிப்பிராயங்களை அது என்றைக்குமே கவனத்திற் கொண்டதில்லை. தென்னாபிரிக்காவிலுள்ள தேச விடுதலை இயக்கங்களிடையே உள்ள வேறுபாடுகளும் ஒழுங்கீனமும், தெளிவின்மையுமே இனவெறி அரசின் கூத்திற்கு உதவி வரும் அம்சங்களென உலகின் முற்போக்கு அவதானிகள் கருதுகின்றனர்.

தனது வெறிக் கூத்தை மேலும் சுதந்திரமாகச் செய்யவே போத்தாவின் அரசு பத்திரிகைச் சுதந்திரத்தின் மீது தனது அம்பை எய்துள்ளது. ஆனல், இந்த நடவடிக்கையின் மூலம் அங்கு நடக்கும் எதையுமே உலகின் கண்களின் முன் மறைத்துவிட முடியாது என்பதை நிருபிப்குமுகமாகத் தணிக்கைக் கட்டுப்பாட்டுக்குப் பின் அங்கு நடந்த அடக்குமுறைகள் பத்திரிகைகளில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன. தென்னாபிரிக்க அரசின் அந்திமம் நெருங்குகின்றது என்பதற்கு இது ஒரு அறிகுறியே இத் தணிக்கைக் கட்டுப்பாடாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிணாமம் - ஒரு கண்ணோட்டம்





பிரபஞ்சம் எங்கும் அந்தகார இருள் சூழ்ந்திருந்த போது தோன்றிய மானுடம், யுகங்கள் தோறும் மாற்றங்களுக்காட்பட்டு இறுதியில் பொதுவுடமைச் சமுதாயமாக மாறும் என்ற மாறாத தத்துவத்தை; ஆழமாகவும், அழகுறவும் "பரிணமம்" இசை நாடகம் மூலம் பாரிஸ் வாழ் ஈழ மக்களுக்கு எடுத்துச் சொன்ன இயக்குனர் அருந்ததியின் (அருள்) முயற்சி பாராட்ட வேண்டியதொன்றாகும்.

ஈழத் தேசிய இனத்தின் பாரம்பரியக் கலை வடிவங்களான; தென்மோடி, வடமோடி இசை மெட்டுக்களினூடாக ஈழமக்களிற்கு இன்று அவசியப்படும் செய்தியினைக் கூறியிருப்பது பொருத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமானதே. அந்நிய ஆதிக்கங்களின் தாக்கங்களினால், ஈழம் வாழ் மேல் தட்டு வர்க்கத்தினர் தங்கள் முகாங்களை இழந்து நின்ற போது; சாதாரண மக்கள் காத்து நின்ற, ஈழத்திற்கே சொந்தமான இவ் இசை வடிவங்களைத் தொடர்ந்தும் வளர்க்கும் அரிய பணியில் "பரிணமம்" நாடகக் கலைஞர்களின் பங்கு போற்றுதற்குரியதே. சமய, இதிகாச, புராணக் கதைகளை மட்டுமேவெளிப்படுத்தி நின்ற இசை நாடக வடிவத்தை ஈழமக்களிற்குத் தேவையான புரட்சிகரக் கருத்துக்களைப் பரவலாக்குவதற்கு இக்கலைஞர்கள் பயன்படுத்தியிருப்பது ஈழதேசத்தின்மீது அவர்கள் கொண்ட பாசத்தைக் காட்டுகிறது.

"பரிணமத்தில்"... சிறகரி, பெஞ்சமின் போன்ற மூத்த ஈழத்துக் கலைஞர்கள் பங்கேற்றிருப்பது வரவேற்கத்தக்கதொன்றாகும். பங்குபற்றிய அனைத்துக் கலைஞர்களின் ஒன்றுபட்ட உழைப்பும், விடுதலைமீது கொண்ட காதலும்; அவர்களது கலைத்துவமிக்க, ஒரே சீரான ஆட்டங்களிலும், இசை நயமிக்க பாடல்களிலும் வெளிப்படுத்தப்பட்டன.

யதார்த்த வாழ்வைத் தொடாத, மானுட நேசமற்ற வியாபார நோக்குடன் வெளிவரும் தமிழகத்துச் சினிமாக்களிலும், வார, மாத இதழ்களிலும் கவரப்பட்டுக், கனவுலகில் சஞ்சரிக்கும் பெரும்பாலான ஈழமக்களின் இதயங்களைத் தட்டி, உண்மை நிலையை உணர வைக்கும் வகையில் "பரிணமம்" அமைந்திருந்தது அவசியமானதே. சிறிய சிறிய குறைபாடுகள் இருப்பின் அவை பரிஸ் மாநகரின் அன்றாட அவலங்களிற்கு மத்தியில், பல வசதியீனங்களுக்கு மத்தியில் இத்தகைய ஆடல் பாடலுடன் கூடிய நாடகத்தை ஒத்திகை செய்து அரங்கேற்ற முடியும் என்ற இயக்குனரின் நம்பிக்கை நடிகர்களின் மனம் நிறைந்த ஒத்துழைப்பு இவற்றின் முன்னே அடிபட்டுப் போயின.

"பரிணமத்தில்" பரிஸ் வாழ் ஈழ மக்கள் மத்தியில் ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையத்திற்கும், நாடக இயக்குனருக்கும். நடிகர்களிற்கும் வரவேற்புக் கிடைத்திருப்பதை உணர முடிகிறது. இந்த வரவேற்பும், பாராட்டுதல்களும் தற்காலிகமாகப் பிரான்சில் வாழும் ஈழமக்களின் சிந்தனைகளில் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பைப் "பரிணம" ஆக்குனர்கள் மீது சுமத்துகின்றனவெனலாம்.

*----*

ஈழத்தில் நடத்தப்படும் அடக்குமுறைகள் தொடர்பான கண்காட்சியொன்று பாரிசில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் பிரான்சுக் கிளையினரால் நடத்தப்பட்டது. ஈழத்தின் இன்னல்களை எடுத்துக்காட்டிய இக்கண்காட்சியை திரளான மக்கள் பார்வையிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நோக்கு

## பிரான்சு:

### பிரான்சில் குடியேறியுள்ள வெளிநாட்டவர்களுக்கெதிரான புதிய எதிர்ப்பு அலை!



பிரான்சின் பாராளுமன்றத் தேர்தல்கள் நெருங்க நெருங்க (மார்ச்-86), பிரான்சில் குடியேறியிருக்கும் வெளிநாட்டவர்களுக்கெதிரான எதிர்ப்பு அலைகளைக் கட்டவிழ்த்து விடுவதில் வலதுசாரி எதிர்க்கட்சிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. சோசலிசக் கட்சிக்கெதிரான அரசியல், பொருளாதார செயற்திட்டங்களை முன்வைக்கும் தகைமையற்ற இந்த வலதுசாரிக் கட்சிகள் இம்முறை தேர்தல் பிரச்சாரத்தின் முக்கிய அம்சமாக வெளிநாட்டவர் பிரச்சினையை எடுத்துள்ளன. பல பொய்யான புள்ளிவிபரங்களுடன் பிரச்சாரம் செய்துவரும் தீவிரவலதுசாரிக் கட்சியான தேசிய முன்னணி பிரான்சில் உள்ள வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 3 மில்லியன் என்றும் அதே சமயம் பிரான்சில் வேலையற்றோர்களின் எண்ணிக்கை 3மில்லியன் என்றும் அதனால் பிரான்சில் உள்ள வெளிநாட்டவர்களை வெளியேற்றுவதன் மூலமே இப்பிரச்சினையை தீர்க்க முடியும் என தேசிய முன்னணி கூறிவருகிறது. இதுபோலவே எதிர்வரும் தேர்தல்களில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றும் என எதிர்பார்க்கப்படும் RPR இன் தலைவரான பாரிஸ் மேயர் ஜக் சிராக் பிரான்சில் குடியேறியுள்ள வெளிநாட்டவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாந்தரப் பிரஜைகளாக்கி அவர்களுக்கான சமூகநலச் சேவைகளை இரத்துச் செய்வதன் மூலம் தன்னிச்சையாகவே இவர்களை நாட்டைவிட்டு அகலச் செய்யலாம் எனக் கருதி வருகிறார். இவர்களுக்குத் துணைபோகும் வகையில் முதலாளித்துவ பத்திரிகைகளும் வெளிநாட்டவர்கள் இழைக்கும் சிறு தவறுகளையும் பெரிதாக்கி பொய்ப்பிரச்சாரம் செய்துவருகின்றன.

இவர்களின் இந்தப் பிரச்சாரங்களை சமீபத்தில் நடந்த பத்திரிகையாளர் மாநாடு ஒன்றின் போது வன்மையாகக் கண்டித்த ஜனாதிபதி மித்திரோன் வெளிநாட்டவர் பிரச்சினைகளில் மனிதாபிமானத்துடன் நடக்க வேண்டும் என்றும், எமது தேவைகளுக்கு அவர்களை உபயோகித்து விட்டு தேவை முடிந்ததும் வெளியேறச் சொல்வது மனித நாகரிகமற்ற செயல் என்றும், இத்தகைய நடவடிக்கைகளில் சோசலிசக் கட்சி ஒரு போதும் ஈடுபடாது என்றும், எதிர்க்கட்சிகளும் இப்பிரச்சினையை மனிதாபிமான ரீதியில் நோக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

* நேர்வரும் தேர்தல்களில் சோசலிசக் கட்சி தோல்வியடையும் என எதிர்பார்க்கப்படும் போதும் அதனுடைய பொருளாதாரக் கொள்கைகள் வெற்றியடைந்து வருகின்றன. தொடர்ந்து பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டு வருவதுடன், நாட்டின் வெளிநாட்டு வர்த்தகம் பாதிப்பெண்ணிக்கையிலிருந்து முற்றாக மீட்டுக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அத்துடன் கைத்தொழில்களை நவீனமயப்படுத்தும் அரசின் கொள்கையும் பலனளிக்க ஆரம்பித்துள்ளது.

* கிறீன் பீஸ் (GREEN PEACE) சமாதான இயக்கத்தின் றெயின்போ வாரியர் (RAINBOW WARRIOR) கப்பல் தகர்ப்பில் குற்றத்தை ஒப்புக் கொண்ட பிரெஞ்சு உளவுப் படையைச் சேர்ந்த இருவருக்கும் 10 வருடச் சிறைத் தண்டனையை நியூசிலாந்து நீதிமன்றம் வழங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெனிவா:

### கோர்பச்சேவ் - றேகன் உச்சி மகாநாடு.



முதலாளித்துவச் செய்தித் தொடர்பு ஸ்தாபனங்களால் பலமாகப் பிரச்சாரம் செய்யப்பட்டு வந்த கோர்பச்சேவ் - றேகன் உச்சி மாநாடு ஜெனிவாவில் எந்தவித ஒப்பந்தமுமே மேற்கொள்ளப்படாமல் முடிவடைந்தது. கூடியளவு நேரம் இருதலைவர்களும் தனிப்பட்ட முறையிலேயே பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர். இதனை பல செய்திகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டன. இறுதியாக வெளியிடப்பட்ட அறிக்கையில் 50% ஆயுதக்குறைப்பை மேற்கொள்வதற்கான முயற்சியில் இரு நாடுகளும் ஈடுபடுவதென்றும் (எந்த வகையில் என்று தெரிவிக்கப்படவில்லை), இரு நாடுகளுக்கிடையேயும் கலாச்சார, வர்த்தகப் பரிமாற்றங்களை மீண்டும் ஆரம்பிப்பதென்றும் கூறப்பட்டுள்ளது. பேச்சுவார்த்தைகளின் போது றேகனின் 'நட்சத்திரப் போர்' முயற்சியை வன்மையாகக் கண்டித்த கோர்பச்சேவ் சோவியத் யூனியன் சமாதானவிருப்பக் கொள்கை கொண்டதென்றும் அமெரிக்காவின் இம்முயற்சியை தீவிரமாக சோவியத் யூனியன் எதிர்க்கும் என்றும் கூறினார். அதுபோல நிக்கராகுவாவில் சோவியத் ஆலோசகர்கள் இருப்பது பற்றி றேகன் கேள்வி எழுப்பிய போது தேசங்களின் விடுதலைப் போராட்டங்களுக்கு உதவி செய்ய சோவியத் அரசியல் சட்டம் வகைசெய்திருப்பதாகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் எந்த போராட்டங்களுக்கும் சோவியத்யூனியன் எப்போதுமே உறுதுணையாக நிற்கும் என்றும் அமெரிக்காவைப்போல இராணுவ மற்றும் அடக்குமுறை அரசுகளுக்கு முண்டு கொடுக்கும் செயல்களை சோவியத் யூனியன் செய்வதில்லை என்றும் கோர்பச்சேவ் றேகனுக்குப் பதில் அளித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலம்பியா:

## கொலம்பியா எரிமலையின் குமுறல் ஏகாதிபத்தியத்தின் இன்னுமொரு சதியா?



கொலம்பியாவில் உள்ள வொல்கானோ எரிமலையின் வெடிப்பு கொலம்பியாவில் பெரும் சேதத்தை விளைவித்துள்ளது. 22,000 மக்களுக்கு மேல் கொல்லப்பட்ட இச்சம்பவத்தில் பல்லாயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து அகதிகளாயுள்ளனர். இந்தச் சம்பவம் ஒரு இயற்கை அழிவு என முதலாளித்துவ செய்தி தொடர்பு சாதனங்களால் வர்ணிக்கப்பட்ட போதும் இதன் பின்னணியில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கரங்கள் இருப்பது புலப்படுகிறது. கொலம்பியாவில் அடக்கப்பட்ட மக்களின் புரட்சிகரப் போராட்டத்தை முன்னெடுக்கும் M-19 இன் சமீபகால எழுச்சிகளிலிருந்து மக்களைத் திசைதிருப்புவதற்காக தனது விஞ்ஞான சாதனங்களைப் பாவித்து அமெரிக்க ஏகாதிபத்தியம் செயற்கையாக ஏற்படுத்திய எரிமலை வெடிப்பே இது எனக் கருதப்படுகிறது. இவ்வெடிப்பை அடுத்து 'நிவாரண' வேலைகள் என்ற காரணத்தின் கீழ் ஏராளமான அமெரிக்க இராணுவ சாதனங்கள் கொலம்பியாவில் இறக்கப் பட்டுவருகின்றன.

நிக்கரகுவா:

## நிக்கரகுவாவில் அவசரகாலநிலை.

ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் நேரடியாக ஈடுபட்டிருக்கும் சின்னஞ்சிறு நாடான நிக்கரகுவாவின் அரசு முதலாளித்துவ செய்தித் தொடர்பு சாதனங்களின் பொய்ப்பிரசாரங்களையும், ஊடுருவல்களையும் தவிர்க்கும் வகையில் அவசரகாலநிலைப் பிரகடனத்தையும் அதன் கீழ் செய்தித் தணிக்கை மற்றும் சில கட்டுப்பாடுகளையும் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா:

### சொந்த யோசனைகளை முன் வைக்கும்படி ENLF இடம் ராஜிவ் வேண்டுகோள்.

'இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசுடன் இந்திய அரசு நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கில்லை' என சென்னையில் நிருபர்களிடம் இந்தியப்பிரதமர் ராஜிவ் காந்தி தெரிவித்துள்ளார். இதேவேளை இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக தீர்க்கமான அணுகுமுறையை மேற்கொள்ளுமாறு ஈழத்தேசிய விடுதலை முன்னணியை (ENLF) அவர் கோரியுள்ளார். இலங்கை அரசுக்குச் சாதகமாகவோ அல்லது போராளிகளுக்குச் சாதகமாகவோ இந்திய அரசு நடந்துகொள்ளவில்லை எனக் கூறிய அவர் தனிநாட்டு இலட்சியத்தை அடையப் போராடி வரும் ஈழப்போராளிகளுக்கு இந்திய அரசு ஆயுதங்கள் எதையும் வழங்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

### பண்டாரியின் யோசனைக்கு ஜே.ஆர். மறுப்பு.

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி பகிரங்கமாக ஜெயவர்த்தனாவுக்கு தெரிவித்த சில யோசனைகளை ஏற்பதற்கு ஜெயவர்த்தன மறுத்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதே வேளையில் யுத்த நிறுத்தம் என்ற போர்வையில் ஈழப் போராளிகளின் மீது இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு சிறிலங்கா அரசு தொடர்ந்தும் தயாராகிக் கொண்டிருந்தால் சிறிலங்கா அரசுடன் கடுமையான ஒரு நிலைப்பாட்டை எடுக்கவேண்டிய நிலைக்கு இந்திய அரசு வரவேண்டியிருக்கும் என்றும் சிறிலங்கா அரசைச் சாந்தப்படுத்தி ஈழப்போராளிகள் மீது பலவந்தத்தைப் பிரயோகித்து பேச்சுவார்த்தைகளை நடத்தும் முன்னைய இந்தியக் கொள்கை தற்போதைய நிலையின் காரணமாக முற்று முழுதாக மறுதலையாகிப் போய்விட்டது என 'இந்து' கருத்து வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த அணுகுண்டுகளை தயாரிக்கும் சக்தி பாகிஸ்தானிடம்....

பாகிஸ்தான் மூன்று தொடக்கம் ஐந்து வரையிலான சிறிய அணுகுண்டுகளைத் தயாரிப்பதற்குத் தேவையான அணுவைப் பொருட்களைக் கொண்டிருப்பதாக இந்திய வெளிநாட்டமைச்சர் பாராளுமன்றத்தில் கூறியுள்ளார். அதேவேளையில் நாம் அமெரிக்க ஜனாதிபதி றேகனுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் போது திரு. றேகன் பாகிஸ்தானின் அணுகுண்டுத் தயாரிப்புப் பற்றி முரண்பாடான தகவல்களையே தந்ததாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கூறியுள்ளார்.

## முதலாளித்துவத்திற்கு தொடர்ந்து பேரடி...

* எல்சல்வடோரில் பணயக் கைதிகள் விடுவிப்பின் மூலம் அரசினால் கைதுசெய்யப்பட்ட தனது போராளிகள் 100 க்கும் அதிகமானோரை மீளப்பெற்ற FMLN இன் அரசியல் வெற்றி...
* நிக்கரகுவாவின் சாண்டினிஸ்டாப் புரட்சிப்படைகள் தொடர்ந்து பல இடங்களில் எதிர்ப்புரட்சியாளர்களின் தளங்களை அழித்து, பலரைக் கொன்று குவித்து வரும் வெற்றி...
* பிலிப்பைன்சில் NPA போராளிகள் அமெரிக்கக் கைக்கூலியான மார்க்கோசுக்கு எதிராக மேற்கொண்டிருக்கும் போராட்டம் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் NPA யை பதவியில் கொண்டுவந்து விடும் என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சே அறிக்கை விடவேண்டி வந்த துயர நிலைமை
* றேகனின் பரம எதிரியாக இருந்தபோதும் செனட்டர்களின் தனிப்பட்ட வேண்டுகோளையும் நிராகரித்து பிரித்தானிய உற்பத்தியை வாங்காது அமெரிக்க இராணுவத்துக்கு பிரெஞ்சு ஜெட்-74 தளங்களை வாங்கிய அமெரிக்க ஜனாதிபதியின் தயவேயும் அதற்கெதிராக முதலாளித்துவம் சந்திக்கும் அன்றாட நெருக்கடி வரத்தின் அம்சங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழப்போராட்டத்தை வெல்லப்போவது ஈழத்தேசிய விடுதலை முன்னணியே "சங்கே முழங்கில்" கருத்துமுழக்கம்

கடந்த மாதம் 27ம் திகதி ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையத்தின் தொடர் கலை நிகழ்ச்சியான சங்கே முழங்கு பரிஸ் 'ரனிலா' தியேட்டரில் நடைபெற்றது. இது மூன்றாவது தடவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேற்படி நிகழ்ச்சியில் கலை விருந்துகளிற்கு மத்தியில் அரசியல் விளக்கங்கள் வழங்கப்பட்ட வேளையிற்றான் மேற்படி கருத்து அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தப்பட்டது.

தோழர் கோவை நந்தன் வரவேற்புரை ஆற்றினர். அவர் தனது உரையில் ஈழத்தில் இன்று நடக்கும் ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறைக்கு ஈழமக்கள் பலியாகி வருவதை விவரித்ததோடு இங்கு வாழும் ஈழமக்களின் கடமைகளையும் சுட்டிக் காட்டினர்.

தமிழீழ விடுதலை இயக்கத் தோழர் காசிலிங்கம் உரையாற்றுகையில் "எமது போராட்டம் சர்வதேச ஏகாதிபத்தியத்திற்கு எதிரானது" என்று கோடிட்டார். அவர் தனது உரையினிலே மேலும் குறிப்பிட்டதாவது :- சர்வதேச ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிலையான போராட்டம் ஒன்றை முன்னெடுக்க எமக்கிடையில் இறுக்கமான ஐக்கியமும், சக்தி வாய்ந்த கட்சி ஒன்றும் தேவை இதனை இன்று ஈழமக்கள் உணர்ந்துள்ளனர். அதோடு, இதனையே மக்கள் வலியுறுத்துகின்றனர். இன்று எமக்கிடையே ஐக்கியம் ஏன் இறுக்கமானதாக அமையவில்லை என்பதற்கான காரணங்களை நாம் ஆராய வேண்டும். ஈழப் போராட்டக் களத்துக்குள் நுழைந்துள்ள முதலாளித்துவக் கும்பல் தான் இன்று தோன்றியிருக்கும் பிரச்சினைகளுக்குக் காரணம். இந்தக் கும்பல் தனது நிலைகளைக் காப்பாற்றிக் கொள்ள ஐக்கியத்தை உதறி எறிந்துகொண்டிருக்கிறது. இந்தக் களைகளை அகற்றிய பின்னர் தான் புரட்சிக் கட்சி ஒன்று உதயமாகும். விடுதலைப் போரின் வெற்றிக்காக நாம் விருப்பு வெறுப்பற்று இயங்க வேண்டும்" இவ்வாறு தோழர் காசிலிங்கம் சொன்னர்.

"மக்களை அடிப்படையாகக் கொண்ட, மக்களை இணைத்த முறையில் எமது போராட்டம் முன்னெடுக்க வேண்டும்" என்று

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டார் ஈழப்புரட்சி அமைப்பின் தோழரான குகன். அவர் தனது உரையிற் குறிப்பிட்ட விபரங்கள் வருமாறு:- "ஈழப்போராட்டம் சர்வதேச அடிப்படையில் பின்னிப் பிணைந்ததே எமக்குக் கிடைத்த ஒரு வெற்றியாகும் எது எப்படி இருப்பினும் தமிழ் பேசுகின்ற மக்களின் எண்ணப்பாடுகளை விட்டுக் கொடுக்காமல் இயக்கங்கள் இயங்குகின்றன. ஈழத் தேசிய விடுதலை முன்னணி என்ற அடிப்படையில் செயற்பாடுகளை ஸ்திரமாக்க வேண்டிய கட்டாயம் ஒன்று நமக்கு ஏற்பட்டிருக்கின்றது. மக்களைத் தேசிய அடிப்படையில் இணைத்துச் செல்லவேண்டிய தேவையும் எமக்கு உண்டு. இயக்கங்களினை இணைப்பது போல மக்களையும் இணைக்க வேண்டும். இதே வேளையில் அவர்களிடையே இருக்கும் முரண்பாடுகளைக் களைதலவசியம். கலை ஒரு கருவி. இதனைப் பயன்படுத்தி மக்களையிணைக்கலாம். அதோடு, கலையினூடாக தெளிவான புரட்சிகரமான கருத்துக்களை மக்களிற்குக் கொடுக்கலாம்".

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தோழரான உமாகாந்தன்; "மொத்த இந்திய உப கண்டத்துக்கான போராட்டமே இன்று ஈழத்தில் நடக்கும் போராட்டமாகும்" எனக் கூறிய அவர் தனது உரையில் பின்வரும் விளக்கங்களை அளித்தார். "ஈழமக்களின் அடிமை விலங்கை உடைக்கும் பொறுப்பை ஈழத்தின் இளைய புரட்சிக் கரங்கள் எடுத்துள்ளன. ஈழப் போராட்டத்தின் நீண்ட காலத் தன்மையை நாம் தெளிவாக உணர்ந்துள்ளோம். துப்பாக்கிகளை விட மக்களையே நாம் உயர்ந்த சக்திகளாக மதிக்கின்றோம். மக்களின் மனப்போக்குகளை மதித்து அதற்கேற்பத் தான் எமது போராட்டம் நடைபெறுகின்றது. இந்திய அரசிடம் இயக்கங்கள் தலை குனிந்துவிடவில்லை. இது தொடர்பாக ஈழமக்களிடம் கலக்கமோ குழப்பமோ ஏற்படத் தேவைஇல்லை. இறுதியாக ஈழப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லப் போவது ஈழத் தேசிய விடுதலை முன்னணியே. எனவே ஐக்கியம் என்ற பதாகையினின்று விலகி ஈழத்தைக் காண்போம் என நினைப்பது கனவு. ஐக்கியம் என்ற விடயத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுதியாகவே நிற்கின்றது. ஐக்கியத்தை விட்டு விலகி நிற்கும் இயக்கங்களை ஐக்கியப் பதாகையின் கீழ் அணி திரளுமாறு வலியுறுத்தும் பொறுப்பு ஈழமக்களைச் சார்ந்தது. இவ்வாறு தோழர் விளக்கமளித்தார்.

ஆபிரிக்க விடுதலை அமைப்பின் தோழர் சம்பா வாழ்த்துரை வழங்கினர். ஐரோப்பிய துருக்கி மாணவர் ஜனநாயகஅமைப்பின் வாழ்த்துச் செய்தி ஒன்றும் வாசிக்கப்பட்டது.

சங்கே முழங்கு நிகழ்ச்சியில் பரதநாட்டியம், குழந்தைகள் நடனம், புல்லாங்குழல் இசை, இசைப்பாடல்கள், நாடகம் ஆகியன இடம் பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர் சிவதாஸ் நன்றியுரையாற்றினர். -கே.கே.மோன்-

# "பேச்சுவார்த்தை-யுத்தநிறுத்தம் போர்வையில் எம்மை சின்னாபின்னப்படுத்தி அழிக்க முயற்சி!"

## 'ஈழ வானொலி'யில் பத்மநாபா உரை

"நாம் செய்கின்ற தியாகங்களும், அர்ப்பணிப்புகளும், படுகின்ற துன்பங்களும் வீண் போகமாட்டாது. எமது அடுத்த தலைமுறையாவது நாம் அடிமைகளல்ல என்ற திமிரோடு வாழவேண்டும் என்பதை எமது இலட்சியமாகக் கொண்டு செயற்படவேண்டும்" என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ. பி. ஆர். எல். எவ்.) செயலாளர் நாயகம் திரு. க. பத்மநாபா, 'ஈழ வானொலி'யில் நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'68 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நாளில்தான் சுரண்டப்பட்ட மக்கள், உழைக்கும் மக்கள், பாட்டாளி வர்க்கப் புரட்சியை நடத்தி, ஆட்சிபீடம் ஏறினர். ருஷ்ய சாம்ராஜ்யத்தில் வாழ்ந்து வந்த தொழிலாள வர்க்கம் அந்த வரலாற்றை முதன்முறையாக மாற்றி அமைத்தது இந்த நாளில்தான்.

'போராடும் உறுதியை புரட்சிகரமான வழிகாட்டுதலின் மூலமாக உலகம் முழுவதும் வாழும் உழைக்கும் மக்களுக்கு வழங்கியநாள்—அந்த நினைவு நாளில் ஆரம்பிக்கின்ற இந்த 'ஈழவானொலியானது' சிறிலங்கா அரசின் கீழ் இருந்து ஈழத்தை விடுவிப்பதற்கும் அந்த ஈழத்தில் உழைக்கும் மக்களின் ஆட்சியை உருவாக்குவதற்கும் தனது கடமையை செவ்வனே ஆற்றுமென நான் உறுதியாக நம்புகிறேன்.

"சிறிலங்கா அரசானது பேச்சுவார்த்தை, யுத்தநிறுத்தம் என்ற போர்வையில் எம்மை சின்னாபின்னப்படுத்தி அழித்துவிடலாம் என்று நம்புகிறது. அதை நாம் சரியாகப் புரிந்துகொண்டுதான் செயற்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பேச்சுவார்த்தையின் மூலம் எமக்கு நியாயபூர்வமான அரசியல் தீர்வு காண முடியாது என்பதை நிரூபிப்பதற்காகவே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம்.

"ஸ்ரீலங்கா அரசானது எம்மை தனது இராணுவத்தின் மூலம் அடக்கி ஒடுக்க முயற்சிக்கின்றது என்பதை வெளிப்படுத்தவே யுத்த நிறுத்தத்தில் ஈடுபட்டோம். நாங்கள் பிரிவினை வெறியர்கள் அல்ல. ஈழமக்களின் சுதந்திரத்திற்காகவும், அவர்களின் கௌரவமான வாழ்விற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் உழைக்கும் சமாதானப் பிரியர்கள் என்பதை இந்த உலகுக்கு எடுத்துக் காட்டவே சமாதான முயற்சிகளில் ஒத்துழைப்புக் கொடுத்தோம். ஆனால் ஈழமக்களின் சுதந்திரம், கௌரவம், அமைதி, முன்னேற்றம் ஆகியவற்றை ஆயுதப்போராட்டம் தவிர்ந்த வேறெந்த வழியாலும் பெறமுடியாது என்பதை மிகவும் திடமாக உணர்ந்துள்ளோம்.

நாம் யுத்தநிறுத்தம் - பேச்சுவார்த்தை என்ற சொல்லிக் கொண்டு வாய்மூடி மௌனிகளாக, கைகட்டி, வாய்பொத்தி நிற்கவில்லை; இதேவேளை ஆத்திரப்பட்டு அவசரத்தில் அடிமையாகி, உணர்ச்சிவசப்பட்டு ஆயுதம் தாங்கிப் போராடுகிறோம் என்ற பெயரை எமது போராட்டத்தின் பின்னுக்குத் தள்ளிவிடவும் நாம் தயாராக இல்லை.

"எனது அன்பிற்குரிய நாட்டு மக்களே! எமது எதிரிகள் எம்மில் பல இலட்சம் பேரை அழித்தொழிக்கலாம்; எமது சொத்துக்களைச் சூறையாடலாம்; பல்லாயிரக்கணக்கானோரை கொன்று குவிக்கலாம். ஆனால் அவர்கள் எமது போராட்டத்தை அடக்கி ஒடுக்கிவிட முடியாது; எமது போராட்டம் ஓயாது ஒழியாது. ஈழதேசத்தை எதிரியின் பிடியிலிருந்து விடுவிக்கும் வரை, ஆளப்படும் வர்க்கத்தை ஆளும் வர்க்கமாக மாற்றும் வரை எமக்கு பணி ஓயாது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஒவ்வொரு தோழனும் அதில் உண்மையாகவும், உறுதியாகவும் செயற்படுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்."

---

தோழர்களே,

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வெளியீடுகளான

* ஈழச் செய்தி
* ஈழ மாணவர் குரல்
* செந்நாம்
* அரசியல் திட்டம்
* EELAM SPOKESMAN / EPRLF SPOKESMAN

ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையத்தின் 1986ம் ஆண்டுக்கான நாட்காட்டி இவற்றையும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரான்சு கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஐக்கியத்திற்காக போராடுவோம்;**
**போராடுவதற்காக ஐக்கியப்படுவோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு: தமிழ் [illegible] விடுதலைப் பேரவை (பிரான்ஸ்)

# TAMOUL MURASU

MURASU - 4
OLI - 2

DECEMBRE
1985



## TERRORISME DES FORCES SRILANKAIS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EDITORIAL




MURASU - 50

## *TERRORISME D'ETAT DANS LES PLANTATIONS*

*Une fois de plus, le terrorisme d'état s'exerce auprès de Tamouls des plantations par le gouvernement fasciste de Srilanka. Plus de 60 tamouls de plantations ont fait l'objet d'arrêstation, detenus et bien entendu torturés par ceux-ci dans las camps militaires.*

*Pour supprimer la lutte d'Eelam, J.R.Jeyawardene et son gouvernement envoyent plus des hommes armées dans les régions du nord et de l'est de Srilanka, avec fermes intentions d'arrêter et de tuer les Tamouls. A l'heure actuelle, ce même acte se produit dans le centre de l'île où vivent les Tamouls de plantations.*

*Le 18 et 19 novembre, plus de 10 000 étudiants tamouls des plantations ont cessé les cours, en signe de protestation contre l'arrêstation des étudiants et des jeunes tamouls dans le centre de l'île.*

*Il est à souligner que la lutte de libération a été déclenchée dans les régions nord et est de Srilanka, avec la boycotte des écoles.*

*A l'heure actuelle le gouvernement interdit la lutte non violente des Tamouls de plantations. Il n'y a pas de doute que les tamouls des régions du nord et de l'est et ceux des plantations s'unissent, en luttant contre le pouvoir actuel, pour obtenir la liberté d'Eelam.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UN DEPUTE SINGHALA DEMANDE D'EMPLOYER DES BOMBES INCENDIERES

Un député du parlement de Polgawela Mr.Sunil Ranjan Jeyakodi a proposé au gouvernement pendant la session parlementaire en disant que l'année 1986 sera une année de guère. Il propose donc l'employer les bombes incendières dans les régions Tamoules, pour supprimer la lutte de libération.

Aussi, il demande expressement des punitions sévères seront attribuées aux personnes qui souhaitent la libération d'Eelam. Ce-ci mène vers l'extermination totale de la Nation Tamoule.

Ce discours dudit parlementaire a été tenu durant le débat budgetaire national.

## LES OBSERVATEURS FACE AUX BOMBES

Les membres du commité d'observateur qui ont été designés par le Président de la République de Srilanka, dans l'affaire de cessez-le-feu en ce qui concerne la violation de celle-ci, et puis la règle établie à Trincomalee, ont rendu visite le 26 octobre 1985 à Sirimapura.

Neuf d'onze membres de ce commité ont visité les places affectées par les irregularités et ont constaté 5 violations.

Quand ses observateurs se rendirent à Srimapura aux environs d'onze heures du matin, des bombes ont été lancées sur eux. Heureusement aucun de ses observateurs ont été atteints. Par contre, une femme âgée, se trouvant non loin du lieu, a été blessée. Ce-ci dit, même les hauts fonctionnaires n'ont pas de sécurité.

Le gouvernement néglige son contrôle envers les forces armées. Pourtant il utilise les actions illégales de ces forces pour faire triomplier sa soif de sang.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SIX CADAVRES ONT ETE TROUVES SUR LA COTE DU SUD DE L'INDE

Le rapport de la police indienne mentionne qu'il a été trouvés des cadavres de 6 tamouls de Srilanka sur la côté sud de l'Inde, Rameswaram. Le corps trouvés sont inclus un corps d'un enfant de 4 ans et d'une femme âgée.

Il a été constaté qu'un bâteau de pêche a quitté Srilanka avec à son bord 40 réfugiés tamouls pendant la fête hindou le 11 novembre 1985 à destination d'Inde. Ce bâteau n'a pas atteint l'Inde. Il est à croire que tous les occupants de ce bâteau sont péris en mer.

## PLUS DES REFUGIES SUR LA PRESQU'ILE DE JAFFNA

Le gouvernement Srilankais continue à terroriser les tamouls dans les régions de Mullaitivu, Vavuniya et Trincomalee, en chassant les tamouls de leur territoire, les échangent contre les Singhalais armés.

Selon la statistique du 20 octobre 1985, 4534 familles, comptant 18 991 personnes sont évacuées des régions de Mullaitivu, Vavuniya et Trincomalee. Celles-ci ont été transportées dans la région de Jaffna, pour leur sécurité.

Le tableau ci-dessous montre la quantité des réfugiés dans les camps de réfugiés à Jaffna:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| Lieu | Nbr. de familles | Nbr. de personnes |
|---|---|---|
| Camp à Jaffna | 363 | 1 947 |
| - do - Nallur | 353 | 1 530 |
| - do - Pt. Pedro | 1 145 | 3 979 |
| - do - Karaveddy | 407 | 1 529 |
| - do - Tellipalai | 169 | 739 |
| - do - Kopay | 358 | 1 472 |
| - do - Uduvil | 206 | 932 |
| - do - Chavakachcheri | 254 | 1 101 |
| - do - Chankanai | 186 | 998 |
| - do - Sandilipay | 276 | 1 373 |
| - do - Velanai | 491 | 1 964 |
| - do - Delft | 25 | 104 |
| - do - Kayts | 301 | 1 323 |
| | 4 534 | 18 991 |

POUR TOUTES LES CORROSPONDANCES

L'EDITEUR
TAMOUL MURASU
CONSEIL DE LA LIBERATION DE TAMOUL EELAM
10,RUE DES MARTYRS
75009-PARIS
FRANCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UNE BOMBE SUR UN CIMITIERE HINDOU A TRINCOMALEE

Le 19 novembre 1985, une bombe a été déposée sur le cimitière Hindou à Trincomalee où les gens venaient pour une funéraille. Il est certain que la bombe a été déposée par les Singhalais armés; connus sous le nom de "garde nationale". Plus que 100 personnes ont participé à la funéraille de Mme.Sellammah. La communauté Hindou de Trincomalee et la commitée des citoyens, ensemble ils sont allés chez l'agent du gouvernement de Trincomalee, exigeant que cette pratique anormale de voit être cessée.

Dorénavant, les morts d'Hindou de Trincomalee seront incinerés dans la cimitière catholique.

Cet incident montre que les Tamouls d'Eelam, n'ont pas le droit de pratiquer cette réligion librement.

## 6000 MUSULMANS COMME REFUGIES A MUTHUR

A cause des atrocités commises par les forces armées Srilankaises et les Singhalais armés, 6000 musulmans ont perdu leurs demeures et leurs propriétés durant le mois de novembre 1985.

Le gouvernement ne fournit même pas les besoins nécessaires comme nourritures, habillements et médicaments aux réfugiés. Ce manquement a été comblé par la solidarité des citoyens en donnant les besoins nécéssaire.

En claire, le gouvernement est en train de détruire la nation tamoule par divers moyens. Comme ces musulmans parlent le Tamoul, le gouvernement les detruit aussi.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## REFUGIES EN INDE

Le gouvernement de Srilanka et les forces de sécurité ont transformé la vie qui est très dûre pour les Tamouls pour qu'il n'y a plus d'exodus vers le Tamoul Nadu. Ces réfugiés peuvent être classés comme suivants:

A) Le peuple par bâteau du fevrier et mars 1985. Ceux-ci sont la plus part de Mannar et Jaffna, fuyant à cause de pillages sans cesse de l'armée. Bon nombre sont les pêcheurs, poussés par la faim à cause de reglements restrictifs du gouvernement. Le gouvernement indien, en réponse de ces réfugiés a ouvert des camps de réfugiés à travers Tamoul Nadu en offrant les besoins nécessaires. Une fois de plus, mille fois mercie au gouvernement indien pour ce geste généreux et 35 000 réfugiés grâce à ce geste peuvent survivre.
Maintenant que le mousson est arrivé, la condition hygiénique dans les camps se déterriorisent puis il y a de manquement de nourritures et autres besoins nécessaires.

B) Le peuple par bâteau d'août et septembre 1985. Le cessez-le-feu, en effet, celui-ci est seulement en théorie: Dans la pratique, pourtant les pseudo-heureuses forces de sécurité continuent leurs pillages dans tous les regions tamoules, en encendiant les maisons et en détruisant tout un village entier. Le résultat c'est qu'il y a une nouvelle vague du peuple par bâteau qui fuyant Srilanka pour l'Inde, environs 15 000 en tout.(pendant les trois derniers mois)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



PUBLIE PAR CONSEIL DE LA LIBERATION DE TAMOUL EELAM (FRANCE)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org